Find us on facebook/tamilmirror | Follow us on tamilmirror | epaper/tamilmirror.lk

# தமிழ் Mirror

www.tamilmirror.lk

MONDAY, JANUARY 31, 2022

திங்கட்கிழமை ஜனவரி 31, 2022 | ஒளி: 07 கதிர்: 219 | பக்கம்:08 | நகரப்பதிப்பு | FREE

## சிறுவர்களை பாதிக்கும் ‘மிஸ்ஸி’



நாட்டில் கொரோனா தொற்றுக்கு மத்தியில் சிறுவர்களைப் பாதிக்கும் மற்றுமொரு நோய் தொடர்பில் கொழும்பு, சீமாட்டி வைத்தியசாலையின் வைத்தியர்கள் எச்சரிக்கை விடுத்துள்ளனர். இதற்கமைய, ‘மிஸ்ஸி’ எனப்படும் குறித்த நோய் சிறுவர்களுக்கு ஏற்படுமானால், அது மரணத்தைக் கூட ஏற்படுத்தும் என, கொழும்பு, சீமாட்டி வைத்தியசாலையின் சிறுவர் நோய் விசேட வைத்தியர் தீபால் பெரேரா அறிவுறுத்தியுள்ளார்.

தொடர்ச்சி P2

தொழிற்சங்கங்களை முடக்க

# சர்வாதிகார அரசாங்கம் முயற்சி



தொழிற்சங்கங்களை முடக்க, இந்தச் சர்வாதிகார அரசாங்கம் முயற்சிப்பதாகத் தெரிவித்த எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸ, இதற்கமைய தொழிற்சங்கங்களை நசுக்கவும் வேலை நிறுத்தப் போராட்டங்களைத் தடுக்கும் நடவடிக்கைகளிலும் ஈடுபடுகிறது என்று தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

பூஸ்டர் டோஸ் வழங்குவதற்கு

## நடமாடும் தடுப்பூசி மையங்கள்



எதிர்வரும் வாரங்களில் விசேட தடுப்பூசி வேலைத் திட்டம் அமல்படுத்தப்படும் என்று தெரிவித்த இராணுவத் தளபதி ஜெனரல் ஷவேந்திர சில்வா, அதற்கமைய பூஸ்டர் டோஸ் வழங்குவதற்கான நடமாடும் தடுப்பூசி மையங்கள் அமைக்கப்படும் எனவும் தெரிவித்தார். தியத்தலாவையில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றிய போது மேலும் அவர் தெரிவித்தாவது, கடந்த இரண்டு நாள்களாக கொரோனா தொற்றுகள் அதிகரித்துள்ளதாக சுட்டிக்காட்டிய அவர், எனவே இதுவரை பூஸ்டர் டோஸ் பெறாதவர்கள் விரைவில் அதனை

தொடர்ச்சி P2

## தனியாரிடமிருந்து மின்சாரம் பெறத் தீர்மானம்



தனியார் மின் உற்பத்தி நிலையங்களில் இருந்து மின்சாரத்தைப் பெற்றுக்கொள்வதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது என்று மின்சக்தி அமைச்சர் காமினி லொக்குகே தெரிவித்தார். இது தொடர்பான யோசனையை இன்றைய அமைச்சரவையில் முன்வைக்கவுள்ளதாகவும் அமைச்சர் குறிப்பிட்டார்.

தொடர்ச்சி P2

உயர்தரப் பரீட்சையின் போது

## மின்வெட்டு இல்லை?



2021ஆம் ஆண்டுக்கான க.பொ.த உயர்தரப் பரீட்சை பெப்ரவரி 07ஆம் திகதி முதல் மார்ச் 5ஆம் திகதி வரை இடம்பெறவுள்ள நிலையில், க.பொ.த உயர்தரப் பரீட்சையின் போது மின்வெட்டு ஏற்படாமல் பார்த்துக்கொள்ள அதிகாரிகளுக்கு உத்தரவிடப்பட்டுள்ளது என கல்வி அமைச்சர் தினேஷ் குணவர்தன தெரிவித்துள்ளார். ஹோமாகமவில் நேற்று (30) இடம்பெற்ற நிகழ்விலேயே கல்வி அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

எந்தவொரு பிரஜைக்கும்

## வலுக்கட்டாயமாக தடுப்பூசி செலுத்தவில்லை



நாட்டிலுள்ள எந்தவொரு பிரஜைக்கும் கொரோனா தடுப்பூசியை வலுக்கட்டாயமாக செலுத்துவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படவில்லை என சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் டொக்டர் அசேல குணவர்தன தெரிவித்தார். நேற்று (30) காலை இடம்பெற்ற இணையத்தள ஊடகவியலாளர் சந்திப்பின் போதே மேற்கண்ட விடயத்தை அவர் தெரிவித்தார். தொடர்ந்தும் உரையாற்றிய அவர் தெரிவித்தாவது: தடுப்பூசியின் முக்கியத்துவம் அனைவருக்கும் தெளிவுபடுத்தப்பட்டுள்ளதால், தடுப்பூசி தொடர்பான தவறான கூற்றுகளை வெளியிடுவதைத் தவிர்க்குமாறு பொதுமக்களை வலியுறுத்தினார்.

தொடர்ச்சி P2

கெரண்டி எல்ல பகுதியிலுள்ள உமாஓயா

## ஆற்றில் நீராடச் சென்ற இளைஞர், யுவதிகள் ஐவர் பலி

■ எம். செல்வராஜா, ராமு தனராஜா



அட்டாம்பிட்டிய, கெரண்டியல பகுதியிலுள்ள உமாஓயா ஆற்றில் நீராடச் சென்ற போது, நீரோட்டத்தில் சிக்குண்டு காணாமல் போன ஐவரில் நால்வரின் சடலங்கள் மீட்கப்பட்டுள்ள நிலையில், யுவதியொருவரின் சடலம், நேற்று (30) மதியம் மீட்கப்பட்டுள்ளதாக அட்டாம்பிட்டிய பொலிஸார் தெரிவித்தனர். இச்சம்பவம் குறித்து மேலும் தெரியவருவதாவது: ஓராண்டு நினைவஞ்சலி நிகழ்வில் கடந்த 28ஆம் திகதி கலந்து கொண்ட உறவினர்களில் 11 பேர், சம்பவ தினம் வீட்டிலிருந்து சுமார் ஒரு கிலோ மீற்றர் தூரத்தில் உள்ள கெரண்டியல்ல, உமாஓயா ஆற்றில் நீராடச் சென்றுள்ளனர்.

தொடர்ச்சி P2



2.5 கோடி ரூபாய் பெறுமதியான

## வெளிநாட்டு நாணய தாள்களுடன் ஐவர் கைது

2.5 கோடி ரூபாய் பெறுமதியான வெளிநாட்டு நாணயத் தாள்களை நாட்டுக்கு வெளியே கடத்த முயன்ற ஐவர், கட்டுநாயக்க பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் வைத்து சுங்க அதிகாரிகளால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

தொடர்ச்சி P2

## எதிர்காலத்தில் உணவு பற்றாக்குறை ஏற்படாது

### அதற்கு தான் பொறுப்பு என்கிறார் மஹிந்தானந்த

■ ஷேன் செனவிரத்ன

எதிர்காலத்தில் உணவுப் பற்றாக்குறை ஏற்படும் என, சில குழுக்கள் தவறான கருத்தைப் பரப்ப முயற்சிப்பதாகத் தெரிவித்த விவசாய அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே, நாட்டில் அவ்வாறான உணவுப் பற்றாக்குறை ஏற்படாது என்பதை நான் பொறுப்புடன் தெரிவித்துக் கொள்கிறேன் என்று தெரிவித்தார்.கண்டி மகாவலி ரீச் ஹோட்டலில் நேற்று முன்தினம் (29) நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே மேற்குறிப்பிட்ட விடயத்தை அவர் தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

பாகிஸ்தானிடம் இருந்து

## 200 மில். டொலர் கடன் பெறுவதற்கு பேச்சு

அரிசி, சீமெந்து, மருந்துப் பொருட்களை இறக்குமதி செய்வதற்காக பாகிஸ்தானிடம் இருந்து 200 மில்லியன் அமெரிக்க டொலர் கடனுதவி பெறுவதற்கு இலங்கை பேச்சுவார்த்தை நடத்தி வருவதாக வர்த்தக அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்தார். அமைச்சர் குணவர்தன அண்மையில் பாகிஸ்தானுக்கு மேற்கொண்ட உத்தியோகபூர்வ விஜயத்தின் போதே, கடன் பெறுவது தொடர்பான விடயதானங்கள் கலந்துரையாடப்பட்டுள்ளன.

தொடர்ச்சி P2

இஸ்லாம் பாடப் புத்தகங்கள்

## மீளப்பெறப்படுவதன் நோக்கம் என்ன?

### தெளிவுபடுத்தக் கோரல்

■ தீஷான் அஹமட், எப்.முபாரக், ஹஸ்பர்



கல்வி வெளியீட்டுத் திணைக்களத்தால் அச்சிட்டு விநியோகிக்கப்பட்ட இஸ்லாம் பாட நூல்களை மீளப் பெறப்படுவதன் நோக்கம் என்ன என்பதை நீதி அமைச்சர் அலி சப்ரி உள்ளிட்ட அரசிலுள்ள முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்கள் மக்களுக்குத் தெளிவுபடுத்த வேண்டுமென திருகோணமலை மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் இம்ரான் மஹ்ரூப் கேட்டுள்ளார்.

தொடர்ச்சி P2

ரூ.600 மில். நட்டத்தால்

## மின் கட்டணம் இரட்டிப்பாக உயரும்



நப்தா கையிருப்பு இல்லாமையால் களனிதிஸ்ஸ அனல்மின் நிலையம் மூலம் இலங்கை மின்சார சபைக்கு 600 மில்லியன் ரூபாய் நட்டம் ஏற்பட்டுள்ளதாகவும் மின்சார கட்டணத்தை இரண்டு மடங்குக்கும் மேலாக அதிகரிக்க இது வழி வகுக்கும் எனவும் தொழிற்சங்கவாதியான ஆனந்த பாலித தெரிவித்தார். ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவித்த போதே மேற்கண்ட விடயத்தைத் தெரிவித்த அவர், மேலும் தெரிவித்ததாவது:

தொடர்ச்சி P2




## சுகாதார வழிகாட்டுதல்களில் இன்றுமுதல் மீண்டும் திருத்தம்

### தொற்றாளர் 22%ஆலும் மரணங்கள் 5%ஆலும் அதிகரிப்பு

நாட்டில் கொரோனா தொற்றுக்குள்ளானவர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளமையைக் கருத்தில் கொண்டு, தற்போதுள்ள சுகாதார வழிகாட்டுதல்களை திருத்துவதற்கு சுகாதார அமைச்சு தீர்மானித்துள்ளது. புதிய சுகாதார வழிகாட்டுதல்கள் இன்று (31) வெளியிடப்படும் என சுகாதார சேவைகள் பிரதிப் பணிப்பாளர் நாயகம் டொக்டர் ஹேமந்த ஹேரத் தெரிவித்தார். பெரும்பான்மையான மக்கள் சுகாதார விதிமுறைகளை கவனமாகக் கடைப்பிடித்தாலும், சிலர் இந்த வழிகாட்டுதல்களை தொடர்ந்து புறக்கணித்து வருகின்றனர் எனவும் இது தொற்றாளர்களின் எண்ணிக்கையில் மீண்டுமோர் உயர்வுக்கு வழிவகுக்கிறது என்றும் சுட்டிக்காட்டினார்.

தொடர்ச்சி P2



## கைப்பற்றிய இடத்திலேயே நாட்டை ஒப்படைக்கவும்

### அரசாங்கத்திடம் பொன்சேகா கோரிக்கை

அரசாங்கத்தின் கொள்கைப் பிரகடனத்தில் இடம் பெற்றுள்ள விடயங்கள் எதனையும் நிறைவேற்றாமல், நாட்டை கைப்பற்றிய இடத்துக்கு கொண்டு வந்து, மீண்டும் ஐக்கிய மக்கள் சக்தியிடம் ஒப்படைக்குமாறு பாராளுமன்ற உறுப்பினர் சரத் பொன்சேகா அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்

# சர்வாதிகார அரசாங்கம்...

கெக்கிராவையில் நேற்று (30) நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு கருத்து தெரிவித்த போதே, மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ந்து தெரிவித்த அவர், எனவே அரசாங்கத்தின் இந்த ஜனநாயக விரோத செயற்பாடுகளை உடனடியாக முடக்க வேண்டும் என்றார்.

நாட்டின் வளங்களை விற்பதற்கு எதிராக தொழிற்சங்கங்கள் எதிர்ப்புகளை முன்னெடுப்பதை ஒடுக்கும் செயற்பாடுகளை இந்த அரசாங்கம் ஆரம்பித்துள்ளதாக சுட்டிக்காட்டினார்.

தொழிலாளர்களின் அடிப்படை உரிமைகளை மீறும் சர்வாதிகார ஆட்சிக்கு எதிராக ஐக்கிய மக்கள் சக்தி, மக்களுடன் இணைந்து நிற்கும் என்று தெரிவித்தார்.

நாட்டுக்காகக் குரல்கொடுக்க, மக்களுக்காக குரல்கொடுக்க தடையை ஏற்படுத்தும் தற்போதைய ஆட்சியாளர்கள், இந்த நாட்டு மக்களுக்கு, ஜனநாயக உரிமை, ஜனநாயக சுதந்திரம் உண்டு என்பதை புரிந்துகொள்ள வேண்டும் என குறிப்பிட்டார்.

எமது நாட்டின் மின்னுற்பத்தி நிலையங்களை நள்ளிரவில் விற்பார்களாயின் அதற்கு எதிராக குரல்கொடுக்க, தொழிற்சங்க தொழிலாளர்களுக்கு உரிமை இல்லையா, தொழிலாளர்களின் குரலை ஒடுக்கவா பார்க்கின்றீர்கள் என கேள்வியெழுப்பினார்.

தொழிற்சங்கவாதிகளின் உரிமைகள் என்பது இந்த நாட்டின் அடிப்படை உரிமைகளாகும். அதனை மாற்றம் செய்வார்களாயின் அதற்கு பாராளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை அவசியம்.

அன்று மக்கள் சுபீட்சத்தின் நோக்கையே வெற்றியடைய செய்ய பாடுபட்டனர். ஆனால், இன்று சுபீட்சத்தின் நோக்கானது, நாட்டு மக்களை பட்டினி போட்டு, நாட்டின் எதிர்காலத்தை கேள்விக்குறியாக்கி, நாட்டின் ஏழ்மையை மேம்படுத்தும் நாட்டை அழிக்கும் நோக்காக பரிணமித்துள்ளது என்றும் தெரிவித்தார்.

# சிறுவர்களைப் பாதிக்கும்...

தற்போது கொரோனா தொற்றின் பரவல் அதிகரித்துள்ளமை காரணமாக, இன்னும் இரண்டு மாதங்களுக்குள் மிஸ்ஸி நோய் சிறுவர்களுக்கு ஏற்படக் கூடும் என தெரிவித்துள்ள அவர், இந்நோய் மிகவும் பாரதூரமானது என தெரிவித்துள்ளார்.

எனவே 12 வயதுக்கு குறைந்த சிறுவர்களுக்கு நோய் எதிர்ப்பு சக்தியை பெற்றுக்கொடுத்தால் இந்த நோயிலிருந்து சிறுவர்களைப் பாதுகாக்கலாம் என தெரிவித்துள்ளார்.

எனவே நோய் எதிர்ப்பு சக்தி குறைந்த சிறுவர்களை குறித்த மிஸ்ஸி நோய் தாக்கும் போது, சிறுவர்களை அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்க நேரிடும் என்பதுடன், அது மரணத்தையும் ஏற்படுத்தும் என்றார்.

இந்நோய் சிறுவர்களுக்கு ஏற்பட்டு இரண்டு வாரங்கள், இரண்டு மாதங்கள் என்ற குறுகிய காலப்பகுதிக்குள் சிறுவர்களுக்கு மீண்டும் ஒரு தடவை காய்ச்சல் ஏற்படுவதுடன். கழுத்து வீங்குவதுடன், கண்கள் மஞ்சள் நிறமாக மாற்றம் அடையும். அத்துடன் சுவாசிப்பதில் சிரமம், சிறுநீருடன் இரத்தம் வெளியேறுதல், குறைந்தளவு சிறுநீரே வெளியேறுதல், இதய துடிப்பின் வேகம் குறைவடைதல் என்பனவும் ஏற்படும் என எச்சரித்துள்ளார்.

# தனியாரிடமிருந்து...

அத்துடன், இந்திய எண்ணெய் நிறுவனத்தினூடாக (ஐ.ஓ.சி) இன்றும் (31)நாளையும் (01) இலங்கை மின்சார சபை நேரடியாக எரிபொருளை கொள்வனவு செய்ய முடியும் எனவும் தெரிவித்தார்.

அடுத்த வாரத்துக்கு மின்சார சபைக்கு தேவையான எரிபொருள் தொடர்பில் இன்றைய தினம் தீர்மானம் எடுக்கப்படும் என எதிர்பார்க்கப்படுவதாகவும் குறிப்பிட்டார்.

தற்போதைக்கு இலங்கை மின்சார சபை எரிபொருள் விநியோகத்தை பெற்று வருவதாக குறிப்பிட்ட அவர், திங்கட்கிழமை முதல் அடுத்த வாரத்திற்கான எரிபொருளை பெற்றுக் கொள்வதற்காக ஐஓசியுடன் பேச்சுவார்த்தை நடத்தப்பட்டு வருவதாகவும் கூறினார்.

ஜனாதிபதியின் பணிப்புரைக்கு அமைவாக மின்சார விநியோகத்தை எவ்வித இடையூறும் இன்றி பேணுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் சுட்டிக்காட்டினார்.

# வெளிநாட்டு நாணய...

இலங்கை சுங்கத் திணைக்களத்தின் போதைப்பொருள் கட்டுப்பாட்டு பிரிவினரால் மேற்கொள்ளப்பட்ட நீண்ட விசாரணையின் விளைவாக சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று தெரியவந்துள்ளது.

நேற்று முன்தினம் (29) டுபாய் செல்லத் தயாராகிக் கொண்டிருந்த போதே சந்தேகநபர்களின் பயணப் பொதிக்குள் மறைத்து வைக்கப்பட்ட பணம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக சுங்க அதிகாரியொருவர் தெரிவித்தார்.

அவர்களிடமிருந்து கைப்பற்றப்பட்ட வெளிநாட்டு நாணயங்களில் 95,000 அமெரிக்க டொலர், 18,000 யூரோ, 37,000 சவூதி ரியால் என்பன உள்ளடங்குவதாகவும் தெரிவித்தார்.

இலங்கை சுங்கப் பிரிவினர் சந்தேகநபர்களிடம் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருவதுடன், பொலிஸாரிடம் ஒப்படைப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளனர்.

# நடமாடும் தடுப்பூசி மையங்கள்

பெற்றுக்கொள்ளுமாறும் கேட்டுக்கொண்டார்.

ஜனாதிபதியின் அறிவுறுத்தலின் பேரில், நாட்டின் ஒவ்வொரு குடிமகனுக்கும் தடுப்பூசி போடுவதற்காக விசேட தடுப்பூசி நிலையங்களை ஆரம்பிக்க இலங்கை இராணுவத்தினர் உட்பட நாட்டின் முப்படை வீரர்கள் பயன்படுத்தப்பட்டதாக இராணுவத் தளபதி குறிப்பிட்டார்.

# ஆற்றில் நீராடச்சென்ற இளைஞர், யுவதிகள் ஐவர் பலி

இவர்கள் அனைவரும் 20 தொடக்கம் 25 வயதுக்குட்பட்ட இளைஞர், யுவதிகளாவர்.

ஆற்றில் நீராடிவிட்டு 6 பேர் அக்கரைக்குச் சென்ற வேளையில், இளைஞர் ஒருவரும் 4 யுவதிகளும் ஆற்றிலிருந்த கற்பாறையொன்றில் அமர்ந்து உரையாடிக் கொண்டிருக்கையில், இளைஞர் தவறி ஆற்றில் வீழ்ந்துள்ளார்.

அவரைக் காப்பாற்றுவதற்காக யுவதிகள் ஒவ்வொருவரும் கைகளைப் பற்றிக்கொண்டு ஆற்றில் இறங்கிய வேளையில், திடீரென ஏற்பட்ட சுழியில் சிக்குண்டு ஆற்றில் மூழ்கி இறந்துள்ளனர்.

நேற்று முன்தினம் (29) பிற்பகல் 2.00 மணியளவில் நடந்த இச்சம்பவம் தொடர்பாக அட்டாம்பிட்டிய பொலிஸ் நிலையத்துக்கு தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதைத் தொடர்ந்து பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி உட்பட உத்தியோகத்தர்கள் சம்பவ இடத்துக்கு விரைந்து, தோட்ட இளைஞர்களுடன் இணைந்து மீட்பு பணியில் ஈடுபட்டு நால்வரின் சடலங்களை மீட்டுள்ளனர்.

இவ்வாறு சடலங்களாக மீட்கப்பட்டவர்கள், நெலுவ, கின்ரூஸ் தோட்டங்களைச் சேர்ந்த ஜெயராம் காஞ்சனப்பிரியா (வயது-21), செல்வகுமார் பரிமளாதேவி (வயது-19), ஹட்டன், திம்புல பத்தனையைச் சேர்ந்த அடையப்பன் பவானி சந்திரா (வயது-24), அட்டாம்பிட்டிய, முதலாம் பிரிவைச் சேர்ந்த வனராஜா டேவிட்குமார் (வயது- 23) ஆகியோர் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

ஆற்றில் மூழ்கி காணாமல் போயுள்ள நெலுவ, கின்ரூஸ் தோட்டத்தைச் சேர்ந்த செல்வகுமார் சசிப்பிரியா (வயது-20) என்ற யுவதியின் சடலம், நேற்று (30) மதியம் மீட்கப்பட்டுள்ளது.

சடலத்தை மீட்கும் பணியில் தியத்தலாவ இராணுவ முகாமைச் சேர்ந்த சுழியோடும் வீரர்களும் ஒலுவில் கடற்படை சுழியோடிகளும் ஈடுபட்டிருந்தனர்.

உயிரிழந்த எஸ்.சசிப்பிரியா, எஸ்.பரிமளாதேவி (திரிஷா) ஆகியோர் ஒரே குடும்பத்தை சேர்ந்தவர்களாவர் என்று அட்டாம்பிட்டிய பொலிஸார் தெரிவித்தனர்.

# மின்வெட்டு இல்லை?

அதன்படி, பரீட்சைக் காலப்பகுதியில் மின்வெட்டு அமல்படுத்தப்படாது என, நம்புவதாக அமைச்சர் தெரிவித்துள்ளார்.

நவம்பர் மாதம் நடைபெறவிருந்த பரீட்சைக்கான அனைத்து ஏற்பாடுகளையும் அமைச்சின் பணிப்புரையின் பேரில் பரீட்சைகள் ஆணையாளர் மேற்கொண்டுள்ளதாகவும் பரீட்சை மற்றும் பெறுபேறுகளுக்கு இடைப்பட்ட காலத்தை குறைப்பதே தமது நோக்கம் எனவும் தெரிவித்தார்.

பரீட்சை பெறுபேறுகளில் ஏற்படும் தாமதங்கள், பல்கலைக்கழகத்துக்குள் நுழைவதில் ஏற்படும் தாமதங்கள் என்பன தடுக்கப்பட்டால், பிள்ளைகளின் கல்விக்காக சுமார் ஒரு வருட கால அவகாசத்தை மீளப் பெற முடியும் என்றும் அமைச்சர் கூறினார்.

# வலுக்கட்டாயமாக...

உள்ளூர் சட்டங்களின்படி தடுப்பூசி வலுக்கட்டாயமாக செலுத்தப்படாது எனவும் அனுமதிப் படிவத்தில் கையொப்பமிட்ட பின்னரே தடுப்பூசி செலுத்தப்படும் என்றும் அவர் கூறினார்.

குழந்தைகளுக்கு தடுப்பூசி போடுவதற்கு முன்னர், பெற்றோரின் அனுமதி பெறப்படும் எனவும் குறிப்பிட்ட அவர், மாணவர்களுக்கு தடுப்பூசி செலுத்தப்பட்ட பின்னர், பாடசாலைகள் அனைத்தும் திறக்கப்பட்டதாக குறிப்பிட்டார்.

குழந்தைகளுக்கு தடுப்பூசி வழங்கப்படக்கூடாது என்று பொய்யான குற்றச்சாட்டுகளை முன்வைக்கும் நபர்களை அவ்வாறான குற்றச்சாட்டுகளை நிறுத்துமாறு கேட்டுக்கொண்டார்.

தடுப்பூசி முயற்சியின் வெற்றியால் க.பொ.த உயர்தரப் பரீட்சை அடுத்த வாரம் நடைபெறவுள்ள நிலையில் தரம் ஐந்து புலமைப் பரிசில் பரீட்சை அண்மையில் நடைபெற்றதாக கூறினார்.

தடுப்பூசி நடவடிக்கையின் முன்னேற்றத்தின் அடிப்படையில் க.பொ.த சாதாரண தரப் பரீட்சையை நடத்துவதற்கான ஆயத்தங்களை பரீட்சைகள் திணைக்களம் தற்போது மேற்கொண்டு வருவதாக தெரிவித்தார்.

# கைப்பற்றிய இடத்திலேயே...

மாத்தறையில் இடம்பெற்ற நிகழ்ச்சி ஒன்றில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு மேலும் தெரிவித்த அவர், தற்போதைய பொருளாதார நிலையில் நாட்டு மக்களுக்கு உண்பதற்கும் குடிப்பதற்கும் கடும் சிரமங்களுக்கு முகங்கொடுத்து வருகின்றனர்.

எல்லா இடங்களிலும் வரிசைகள் காணப்படுகின்றன. மின்சாரம் துண்டிக்கப்படுவதாகவும் முன்னர் எமது நாட்டில் நீர்த் தட்டுப்பாட்டாலேயே மின் தடை ஏற்படும் எனவும் தற்போது எரிபொருள் தட்டுப்பாட்டால் மின் தடைப்படும் முதல் சந்தர்ப்பம் என்றும் குறிப்பிட்டார்.

**ஒரு கிலோ கிராம் அரிசியை 60 ரூபாய்க்கும் பருப்பை 80 ரூபாய்க்கும் 1,000 ரூபாய்க்கும் குறைவான விலையில் காஸ் சிலிண்டரை வழங்கும் காலம் மீண்டும் சாத்தியமாகும். நாட்டை வழங்கும் போது அபிவிருத்தி செய்து வழங்குமாறும் கேட்டுக்கொண்டார்**

கட்டியெழுப்ப முடியாத நிலைக்கு நாடு சென்றுள்ளது என்று தெரிவித்த அவர், அடுத்த மூன்று ஆண்டுகளில் கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்றுவதாக தெரிவிக்கின்றனர். நாட்டை தங்களிடம் ஒப்படைக்கும் போது தந்த இடத்திலேயே மீண்டும் ஒப்படைக்குமாறு இந்த அரசாங்கத்திடம் தான் கேட்டுக்கொள்வதாகத் தெரிவித்தார்.

அவ்வாறு ஒப்படைக்கப்பட்டால், ஒரு கிலோ கிராம் அரிசியை 60 ரூபாய்க்கும் பருப்பை 80 ரூபாய்க்கும் 1,000 ரூபாய்க்கும் குறைவான விலையில் காஸ் சிலிண்டரை வழங்கும் காலம் மீண்டும் சாத்தியமாகும். நாட்டை வழங்கும் போது அபிவிருத்தி செய்து வழங்குமாறும் கேட்டுக்கொண்டார்.

# மீளப்பெறப்படுவதன் நோக்கம் என்ன?

இது தொடர்காக அவர் விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

“ஞானசார தேரர் தலைமையிலான ஒரே நாடு - ஒரே சட்டம் ஜனாதிபதி செயலணியின் பரிந்துரைக்கமைய, இஸ்லாம் பாட நூல்கள் மீளப் பெறப்படுவதாக ஊடகங்களில் செய்தி வெளிவந்துள்ளது.

“கல்வி வெளியீட்டுத் திணைக்களத்தால் நியமிக்கப்படும் துறைசார்ந்த வாண்மை மிகுந்தோரால் தான் பாட நூல்கள் எழுதப்படுகின்றன. இஸ்லாம் பாட நூல்களும் அவ்வாறு தான் எழுதப்படுகின்றன. இவ்வாறு எழுதி வெளியிடப்பட்டு விநியோகிக்கப்பட்ட இஸ்லாம் பாடநூல்கள் சம்பந்தமான தீர்மானம் எடுக்கும் உரிமை ஞானசார தேரருக்கு உண்டா?

“இந்த விடயத்தில் அரசில் முக்கிய பங்கு வகிக்கும் அமைச்சர் அலி சப்ரி கவனம் செலுத்த வேண்டும். இதனை மக்களுக்கு தெளிவுபடுத்த வேண்டும்.

“அரசுக்கு ஆதரவு வழங்கி வரும் தேசிய காங்கிரஸ், முஸ்லிம் காங்கிரஸ், அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் பாராளுமன்ற உறுப்பினர்கள் இந்த விடயத்தில் மௌனம் காப்பதன் அர்த்தம் என்ன? இந்த மௌனம் இவர்களது சம்மதத்தோடு தான் இந்த நாடகம் அரங்கேற்றப்படுகின்றதா என்ற சந்தேகத்தை மக்களுக்கு ஏற்படுத்தியுள்ளது.

“எனவே, மீளப் பெறப்படும் இஸ்லாம் பாடநூல்களில் என்ன மாற்றங்கள் செய்யப்படவுள்ளன என்பதையாவது இவர்களும் மக்களுக்குத் தெளிவுபடுத்த வேண்டும். சுய இலாபத்துக்காக சமூக உரிமைகளை தாரைவார்க்க வேண்டாமென நான் கேட்டுக் கொள்கிறேன்” எனக் குறிப்பிட்டுள்ளார்.

# 200 மில். டொலர் கடன் பெறுவதற்கு பேச்சு

கடனுதவியின் கீழ் பொருட்களை இறக்குமதி செய்வது அரச வர்த்தக (பொது) கூட்டுத்தாபனத்தால் மேற்கொள்ளப்படும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

பாகிஸ்தானில் உற்பத்தி செய்யப்படும் சீமெந்து, பாசுமதி அரிசி, மருந்துகளை இந்த வருடம் கடனுதவியின் கீழ் இறக்குமதி செய்யவுள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

# மின் கட்டணம் இரட்டிப்பாக உயரும்

மின்சார சபைக்கு ஏற்பட்ட நட்டம் ரூபாய் 600 மில்லியனாக இருந்தால், இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திற்கு 650 மில்லியனுக்கும் அதிகமான நட்டம் ஏற்பட்டுள்ளதாக சம்பந்தப்பட்ட அமைச்சர் கூறியுள்ளதாகவும் சுட்டிக்காட்டினார்.

ஒரு லீற்றர் டீசலை விட நாப்தாவின் விலை 35 ரூபாய் குறைவு என்றும் உலை எண்ணெய் விலை 60 ரூபாய் குறைவு எனவும் குறிப்பிட்டார்.

எனினும், எரிசக்தி அமைச்சரும் அமைச்சின் அதிகாரிகளும் நாட்டை அபிவிருத்தி செய்வதாகக் கூறி, உலை எண்ணெய் மற்றும் நப்தா பாவனையை நிறுத்தியதாக அவர் கூறினார்.

**ஊழலுக்கு மத்தியில் நாட்டை நிர்க்கதியான நிலைக்குத் தள்ளும் வகையில் எரிவாயு விலைகள் அதிகரிக்கப்பட்டுள்ளது. வாழ்க்கைச் செலவும் 20 சதவீதத்தால் அதிகரித்துள்ளது. காரணமான அமைச்சர், தற்போது பல்வேறு காரணங்களை முன்வைத்து வருகிறார்**

இலங்கையில் மாத்திரம் எரிபொருளின் விலை 85 சதவீதத்தால் அதிகரித்துள்ளதாகத் தெரிவித்த பாலித, உலகளாவிய எரிபொருள் விலையின் அதிகரிப்பு காரணமாக எரிபொருள் விலை உயரவில்லை என்றும் சுட்டிக்காட்டினார்.

ஊழலுக்கு மத்தியில் நாட்டை நிர்க்கதியான நிலைக்குத் தள்ளும் வகையில் எரிவாயு விலைகள் அதிகரிக்கப்பட்டுள்ளதாவும் வாழ்க்கைச் செலவும் 20 சதவீதத்தால் அதிகரித்துள்ளதாகவும் இந்த அதிகரிப்புக்கு காரணமான அமைச்சர், தற்போது பல்வேறு காரணங்களை முன்வைத்து வருவதாக அவர் மேலும் தெரிவித்தார்.

# எதிர்காலத்தில் உணவு...

அங்கு மேலும் தெரிவித்த அவர், எதிர்காலத்தில் நாட்டில் உணவுப் பற்றாக்குறை ஏற்படும் என இரசாயன உர நிறுவனம் ஒன்றின் பணிப்பாளரான பேராதனை பல்கலைக்கழக விரிவுரையாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

நாட்டில் அவ்வாறான உணவுப் பற்றாக்குறை ஏற்படாது என்பதை நான் பொறுப்புடன் தெரிவித்துக் கொள்கிறேன் என்று அமைச்சர் குறிப்பிட்டார்.

இன்றைய சமூக ஊடகங்களைப் பார்க்கும் போது, உலகிலேயே கொரோனா வைரஸ் பரவியுள்ள ஒரே நாடு இலங்கைதான் என்று தோன்றுகிறது. உலகின் ஏனைய நாடுகளில் கொரோனா நோயாளிகள் இல்லை என்பது போல் அவர்கள் நடந்து கொள்கிறார்கள்.

இந்த நாட்டிலுள்ள 16 வயதுக்கு மேற்பட்டவர்களில் 100% பேர் முதல் தடுப்பூசியையும் 85% பேர் இரண்டாவது தடுப்பூசியையும் 55 இலட்சம் பேர் மூன்றாவது தடுப்பூசியையும் பெற்றுக்கொண்டுள்ளனர். இன்னும் சில நாள்களில் மூன்று தடுப்பூசிகளையும் 85% மக்களுக்கு வழங்கிய உலகின் ஒரே நாடாக இலங்கை மாறும் என்றும் அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

இன்னும் சில மாதங்களில் பொருட்களின் விலையை குறைப்பதன் மூலம் மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்ற முடியும் எனவும் உணவுக்கு பஞ்சம் இருக்காது எனவும் குறிப்பிட்டார்.

இந்நாட்டு மக்கள் கடந்த பருவத்தில் அறுவடை செய்த நெல்லை மட்டுமே உண்கின்றனர் என்பதையும் அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

# சுகாதார வழிகாட்டுதல்களில் இன்றுமுதல் மீண்டும் திருத்தம்

அடுத்த இரண்டு வாரங்களில் பதிவாகும் கொரோனா தொற்றுகளின் எண்ணிக்கை இன்றைய அவர்களின் நடத்தையைப் பொறுத்தே அமையும் என்பதால், பொதுமக்கள் பொறுப்புடன் செயற்படுமாறு அவர் அறிவுறுத்தியுள்ளார்.

நாட்டை மூட வேண்டிய நிலை ஏற்பட்டால், மாதாந்த சம்பளம் பெறுவோருக்கு அது பெரும் பிரச்சினையாக அமையும் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

சமூகத்தில் நிலவும் பல்வேறு கட்டுக்கதைகளால் பூஸ்டர் டோஸ் பெற்றுக்கொள்ள சிலர் தயக்கம் காட்டுவது போல் தெரிகிறது என்றும், இதுபோன்ற கட்டுக்கதைகளை நம்பி மக்கள் ஏமாற வேண்டாம் என்றும் அவர் கேட்டுக் கொண்டார்.

கடந்த வாரத்துடன் ஒப்பிடுகையில் நாட்டில் கொரோனா நோயாளர்களின் எண்ணிக்கை 22 சதவீதத்தால் அதிகரித்துள்ளதுடன், மரண எண்ணிக்கையும் 5 சதவீதத்தால் அதிகரித்துள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# ஒன்றிணைய ஐ.தே.கவுக்கு சஜித் அணி அழைப்பு

■ ஷேன் செனவிரத்ன

நாட்டு மக்கள் முகங்கொடுத்திருக்கும் நெருக்கடி நிலைமைகளில் இருந்து அவர்களை மீட்பதற்காக அனைத்து கட்சிகளும் ஒன்றிணைய வேண்டும் எனத் தெரிவிக்கும் ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச்செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க, ஐக்கிய தேசிய கட்சியும் தம்முடன் இணைந்து கொள்வதற்கு அழைப்பு விடுப்பதாகவும் தெரிவித்தார்.

அரசாங்கத்தின் கொள்கைகளை விமர்சித்து கொண்டிருப்பதைக் காட்டிலும், அரசாங்கத்துக்கு சரியான பாதையைக் காட்டுவதே முக்கியமானது எனவும், நாடு வீழ்ச்சியடைந்தால் எவருக்கும் அரசியல் செய்ய முடியாது என்றும் தெரிவித்தார்.

கண்டியில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு தொடர்ந்து உரையாற்றிய அவர்,



அரசாங்கத்துக்குள் பாரிய பிளவு ஏற்பட்டுள்ளது. அமைச்சரவையின் உறுப்பினர்களே அரசாங்கத்தை விமர்சித்து வருகிறார்கள்.

மின்உற்பத்திக்கு தேவையான நிலக்கரி, டீசலை உரிய நேரத்துக்குப் பெற்றுக்கொடுப்பதில் அரசாங்கம் தோல்வியடைந்துள்ளது. இதனால் நாட்டின் பொருளாதாரம் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளது என்றார்.

# கோவிலைப் புனரமைக்க முன்வந்த வெளிநாட்டவர்

■ அளுத்கம துசித டி சில்வா

பேருவளை, கீரந்திடிய ஸ்ரீ முத்துமாரி அம்மன் கோவிலுக்கு வந்த ஜேர்மன் நாட்டவர்கள் சிலர், அந்தக் கோவிலின் புனரமைப்புப் பணிகளுக்கு நிதி உதவிகளை வழங்க முன்வந்துள்ளனர்.

ஜேர்மன் ஆயுபோவன் ஈச் அமைப்பின் பணிப்பாளரான அந்நாட்டைச் சேர்ந்த கோனி என்பவர் உள்ளிட்டவர்கள், இக்கோவிலுக்கு வழிபாடுகளை மேற்கொள்ள வந்துள்ளனர்.

இதன்போது கோவிலின் நிலைக்கண்டு கவலையடைந்த ஜேர்மன் நாட்டவர்கள், கோவிலின்



புனரமைப்புப் பணிகளுக்காக நிதி உதவிகளை வழங்குவதாக உறுதியளித்துள்ளதோடு,



இரண்டரை இலட்ச ரூபாய் நிதி உதவியையும் இதன்போது வழங்கியுள்ளனர்.

தான் ஜேர்மனிக்கு திரும்பியதும் கட்டம் கட்டமாக நிதி உதவிகளை வழங்கி, கோவிலின் நிர்மாணப் பணிகளை நிறைவு செய்ய உதவுதாக கோனி உறுதியளித்துள்ளார்.

# வேட்டையாடிய பிக்கு கைது

■ மஹேஸ் கீர்த்தி ரத்ன

பாதுகாக்கப்பட்ட நக்கிள்ஸ் வனப் பகுதியின் சேரா நீர்வீழ்ச்சிக்கு அருகில் வைத்து வேட்டையாடிக் கொண்டிருந்த பௌத்த பிக்கு உள்ளிட்ட மூவரை வன ஜீவராசி திணைக்களத்தினர் கைது செய்துள்ளனர். கைது செய்யப்பட்டவர்களிடமிருந்து எறும்புத்



தின்னியின் இறைச்சி 6 கிலோவையும், 6 கிலோ மீன்களையும் அதிகாரிகள் கைப்பற்றியுள்ளனர்.

மேலும், வேட்டைக்காகப் பயன்படுத்திய துப்பாக்கி, மீன் பிடி தூண்டில், ஓட்டோவையும் அதிகாரிகள் கைப்பற்றியுள்ளதோடு, சந்தேகநபர்களை நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.



# இறால் நீர் தொட்டிக்குள் சடலம்

■ ரஸீன் ரஸ்மின்

உடப்பு பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட கொத்தாந்தீவு கிராமத்தில் கைவிடப்பட்டுள்ள இறால் பண்ணை நீர்த் தொட்டிக்குள் இருந்து இளம் குடும்பஸ்தர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

அப்புத்தளை வெரகொல்ல தோட்டத்தைச் சேர்ந்த ஒரு பிள்ளையின் தந்தையான 30 வயதுடைய இளம் குடும்பஸ்தரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார் என பொலிஸார் தெரிவித்தனர்.

முந்நல் - கொதத்தாந்தீவு பகுதியிலுள்ள இறால் பண்ணைக்கு வேலைக்காக கடந்த 27 ஆம் திகதி அப்புத்தளை வெரகொல்ல தோட்டத்தைச் சேர்ந்த குறித்த நபர் வருகை தந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்நிலையில், அந்நபர் காணாமல் போனதைத் தொடர்ந்து அவரை தேடிவந்த நிலையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார். இந்தச் சம்பவம் தொடர்பில் உடப்பு பொலிஸாரும் பொலிஸ் தடவியல் பிரிவினரும் இணைந்து மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகினறனர்.



# இடம்பெயர்ந்த உறவுகளுடன் ஜீவன்


நீதி அமைச்சரின் விஷேட அழைப்பின் பேரில், முல்லைத்தீவுக்கு விஜயம் மேற்கொண்ட இராஜாங்க அமைச்சர் ஜீவன் தொண்டமான், அங்கு இடம்பெற்ற அபிவிருத்தி கூட்டத்தில் கலந்து கொண்டதோடு, மலையகத்திலிருந்து இடம்பெயர்ந்து வாழும் உறவுகளையும் சந்தித்துக் கலந்துரையாடினார். (படங்கள்: தலவாக்கலை பி. கேதீஸ்)

# அமைச்சர் ஜோன்ஸ்டன் விடுத்துள்ள பணிப்புரை

அதுல்கோட்டை - அங்கம்பிடிய வீதி, நாவல இராஜகிரிய வீதி ஆகிய வீதிகளை இணைத்து இராஜகிரிய நாவல கால்வாயின் குறுக்கே நிர்மாணிக்கப்படும் புதிய பாலத்தின் நிர்மாணப் பணிகளை துரிதப்படுத்தி நிறைவு செய்யுமாறு அதிகாரிகளுக்கு நெடுஞ்சாலைகள் அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்ணான்டோ பணிப்புரை விடுத்துள்ளார்.

எத்துல்கோட்டே - நாவல வீதியில் நிலவும் கடும் போக்குவரத்து நெரிசலுக்கு தீர்வாக, இராஜகிரிய - நாவல கால்வாயின் குறுக்கே நிர்மாணிக்கப்படும் புதிய பாலத்தின் நிர்மாணப் பணிகள் 60 சதவீதம் நிறைவடைந்துள்ளதாகவும் அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார்.

வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் முழு மேற்பார்வையின் கீழ் அரச அபிவிருத்தி



மற்றும் வடிவமைப்புக் கூட்டுத்தாபனத்தால் இரு வழிப்பாதையுடன் கூடிய இந்தப் பாலம் நிர்மாணிக்கப்பட்டு வருவதாக நெடுஞ்சாலைகள் அமைச்சு தெரிவித்துள்ளது.

இந்தப் புதிய பாலம் நிர்மாணிக்கப்படுவதன் மூலம் பாராளுமன்ற வீதி, கோட்டே ஆகிய பகுதிகளில் இருந்து வரும் வாகனங்கள் நாவலை நோக்கி இலகுவாக செல்லக்கூடியதாக இருப்பதுடன் இராஜகிரிய வீதியில் நிலவும் போக்குவரத்து நெரிசல் குறைவடையும் எனவும் அமைச்சு மேலும் தெரிவித்துள்ளது.



# கொண்டாடுவதற்கு அரசாங்கத்துக்கு தகுதியில்லை

தடுப்பூசிகள் செலுத்தும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டு ஒருவருட நிறைவை கொண்டாடுவதற்கு அரசாங்கத்துக்கு தகுதியில்லை எனத் தெரிவிக்கும் அரச தாதியர்கள் சங்கத்தின் தலைவர் சமன் ரத்னபிரிய, நாட்டிலுள்ள வெறும் 23 சதவீதமானோருக்கே மூன்றாவது தடுப்பூசி செலுத்தப்பட்டுள்ளது என்றார்.

> **தடுப்பூசிகளை விரைவாக கொண்டுவாருங்கள் என அரசாங்கத்துக்கு அழுத்தங்களை வழங்கினோம். ஆனால், அரசாங்கம் அப்போது மூடநம்பிக்கைகளை நம்பியிருந்தது**

நாட்டிலுள்ள அனைவருக்கும் மூன்றாவது தடுப்பூசிகளை செலுத்துவோமென அரசாங்கம் கூறினாலும் நாட்டின் நூற்றுக்கு வெறும் 23 சதவீதமானவர்களுக்கே தடுப்பூசிகள் செலுத்தப்பட்டுள்ளன. கொரோனா வைரஸ்க்கு தடுப்பூசியே தீர்வு என்பதை அரசாங்கம் காலந்தாழ்த்தியே ஏற்றுகொண்டிருந்ததாகவும் அவர் கூறினார்.

தடுப்பூசிகளை விரைவாக நாட்டுக்குக் கொண்டுவாருங்கள் என நாம் அரசாங்கத்துக்கும், சுகாதாரத் தரப்பினருக்கும் அழுத்தங்களை வழங்கினோம். ஆனால், அரசாங்கம் அப்போது மூடநம்பிக்கைகளை நம்பியிருந்தது.

எனவே தடுப்பூசி செலுத்த ஆரம்பித்து ஒரு வருட பூர்த்தியை அரசாங்கம் கொண்டாடுவது பொய்யான ஒன்று. அதனை அரசாங்கம் கொண்டாடக்கூடாது எனவும் தெரிவித்தார்.

# மாணவனுக்கு உதவிக்கரம் நீட்டினார் ஷிரந்தி ராஜபக்ஷ

எலும்பு மச்சை புற்றுநோயால் பாதிக்கப்பட்ட தம்புத்தேகமவை சேர்ந்த டீ.என்.சச்சித் சிதுமின என்ற மாணவனின் நோயை குணப்படுத்துவதற்கு உதவி செய்ய பிரதமரின் பாரியார் ஷிரந்தி விக்கிரமசிங்க ராஜபக்ஷ முன்வந்துள்ளார்.

சாதாரண தரப் பரீட்சையில் சிறந்த சித்தி எய்திய 17 வயதுடைய டீ.என்.சச்சித் என்ற மாணவன், தற்போது அநுராதபுரம், மகுலேவ தேசிய பாடசாலையில் கணித பிரிவில் உயர் தரம் கற்று வருகிறார்.

சச்சித் சிதுமினவின் முழங்கால் பகுதியில் எலும்பு அகற்றப்பட்டுள்ள நிலையில், செயற்கை எலும்பு



பொருத்தப்படுவதற்கு 34 இலட்சம் ரூபாய் செலவாகும் என வைத்தியர்கள் கூறியுள்ளனர்.

மாதாந்தம் வழங்கப்படும் தடுப்பூசியின் மதிப்பு ஒரு இலட்சத்து 50 ஆயிரம் ரூபாயாகும். குறித்த முதலாவது தடுப்பூசியை மாணவனின் வீட்டிற்கே கொண்டு சென்று வழங்கிய ஷிரந்தி, அதன் இரண்டாவது ஊசியை நேற்று (30) அலரி மாளிகையில் வைத்து வழங்கினார்.


## கேள்வி மனுக் கோரலுக்கான அழைப்பு

### நகர அபிவிருத்தி, கழிவுப் பொருள் வெளியேற்றம் மற்றும் துப்பரவு ஏற்பாட்டு நடவடிக்கைகள் இராஜாங்க அமைச்சு

**ஹொறிங்ரன் மாவத்தை, கொழும்பு 07 இல் 115 வீட்டுத்தொகுதி திட்டத்தின் மிகுதி வேலையை பூர்த்திசெய்வதற்கான வரைபு, நிர்மாணம் மற்றும் பகுதியளவிலான நிதியிடல்**

**ஒப்பந்த இல: UDA/HD/CON/2022/01**

1. நகர அபிவிருத்தி அதிகார சபையின் சார்பில் நகர அபிவிருத்தி, கழிவுப் பொருள் வெளியேற்றம் மற்றும் துப்பரவு ஏற்பாட்டு நடவடிக்கைகள் இராஜாங்க அமைச்சின் அமைச்சரவையால் நியமிக்கப்பட்ட நிலையான பெறுகைக் குழுவின் தலைவர் அவர்கள், ரொறிங்ரன் மாவத்தை, கொழும்பு 07 இல் அமைந்துள்ள காணியில் வரைபு மற்றும் நிர்மாணம் அடிப்படையில் பின்வருமாறு விபரிக்கப்பட்ட அடிப்படையிலும் மற்றும் இதனால் எழும் ஏதாவது குறைபாடுகளுக்கு தீர்வினை வழங்கும் வகையிலும் அமைந்த வரைபு மற்றும் நிர்மாண அடிப்படையிலான வீட்டுத் திட்டத்திற்கு தகுதிவாய்ந்த மற்றும் பொருத்தமான நபர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட கேள்வி மனுக்களை கோருவதற்கான அழைப்பை விடுத்துள்ளார்.

**2. திட்டத்தின் நோக்கம்**

400 சதுர அடியினைக் கொண்ட வீட்டுத் தொகுதியினை உள்ளடக்கிய வகையில் 12 மாடிகளைக் (G+11) கொண்ட 115 குடியிருப்புத் தொகுதிகளை ரொறிங்ரன் மாவத்தை, கொழும்பு 07 இல் நிர்மாணித்தல். கட்டுமானப் பணிகளை முன்னெடுக்கும் நிறுவனத்தால் வழங்கப்பட்ட கட்டடத் தொகுதியின் வரைபடத்திற்கிணங்க, ஒவ்வொரு வீட்டுத்தொகுதியும் இரண்டு படுக்கை அறைகள், வரவேற்பறை, சமையலறை, சாப்பாட்டறை மற்றும் மலசல கூடம் போன்றவற்றை உள்ளடக்கியதாகக் காணப்படும்.

3. கேள்வி மனுக்கள் **தேசிய போட்டி கேள்வி மனு விதிமுறைகள் ஊடாக நடைமுறைப்படுத்தப்படும்.**

➢ ஒப்பந்த வெகுமதிக்கான இயலளவைக் கொண்டிருப்பதற்கு, சாத்தியமான கேள்வி மனுதாரர்கள் கறுப்பு பட்டியலிடப்பட்ட ஒப்பந்தகாரர்களைக் கொண்ட பெயர்ப்பட்டியலில் இடம்பெறாதவர்களாக இருப்பதுடன்,பின்வரும் ஏதாவது ஒரு தகமையைக் கொண்டிருப்பவராக இருத்தல் வேண்டும்

➢ உள்நாட்டு அபிவிருத்தியாளர் அல்லது ஒப்பந்தக்காரர், கட்டட வேலைகளில் தரம் "C1" அல்லது அதற்கு மேலான நிர்மாண பயிற்சிகளைப் பெற்றுள்ளதோடு நிர்மாணக் கைத்தொழில் அபிவிருத்தி அதிகார சபையிலும் (CIDA) பதிவு செய்யப்பட்டவராக இருத்தல் வேண்டும்.

அல்லது

• கேள்வி மனுதாரர் ஒருவர் மேற்குறித்த தகமைகளை பூர்த்தி செய்யாத பட்சத்தில் அவர் அபிவிருத்தியாளர்/முதலீட்டாளர் என்று கருதப்படுவதோடு, அவர் கட்டட வேலைகளில் தரம் "C1" அல்லது அதற்கு மேலான நிர்மாண பயிற்சிகளைப் பெற்றுள்ளதோடு நிர்மாணக் கைத்தொழில் அபிவிருத்தி அதிகார சபையில் (CIDA) பதிவு செய்யபட்ட உள்நாட்டு ஒப்பந்தக்காரரோடு ஒன்றிணைந்து கூட்டாக நிர்மாணப் பணிகளை முன்னெடுத்தல் வேண்டும். இச் சூழ்நிலையில், தேவையான நிதியியல் திறனை நிரூபிப்பதோடு, கூட்டுப் பங்குதாரர்கள் இவ் முன்மொழியப்பட்ட திட்டத்திற்கு சமனான வீட்டுத்திட்டத்தை நிர்மாணித்திருத்தல் மற்றும் அபிவிருத்தி செய்திருத்தல் வேண்டும்.

மற்றும்

➢ கடந்த 5 வருடங்களில் சராசரி வருடாந்த புரழ்வு ஆகக் குறைந்தது ரூ. 600 மில்லியன் ஆக இருத்தல் வேண்டும். (கேள்வி மனுதாரர்களில் உள்ளடக்கப்பட்ட கூட்டுப் பங்குதாரர் ஒவ்வொருவரும் தங்கள் நிதித் தகவல்களை சமர்ப்பித்தல் வேண்டும்)

மற்றும்

➢ கடந்த 5 வருடங்களில் இவ் வீட்டுத்திட்டத்திற்கு ஒத்த (வரைபு மற்றும் நிர்மாண வீட்டுத் திட்டம்) ஆகக்குறைந்தது 12 மாடிகளை (G +11) உள்ளடக்கிய வகையில் குறைந்த பட்சம் ஒரு வீட்டுத் திட்டத்தையாவது நிர்மாணித்திருத்தல் வேண்டும்.

மற்றும்

➢ கேள்வி மனுதாரரால் ஒப்பந்தப் பெறுமதியின் 50மூ ஆரம்ப நிதியிடலாக செலுத்துதல் வேண்டும். இத் திட்டம் பூர்த்தி செய்யப்பட்ட சான்றிதழ் பெறப்பட்டு ஆறு (06) மாதத்திற்குள் நகர அபிவிருத்தி அதிகார சபையால் 2.5% பிடித்து வைத்தல் (retention) தொகை கழித்து மிகுதித் தொகை மீள செலுத்தப்படும்.

4. ஒப்பந்தக் காலம் - 730 நாட்கள்

5. ஆர்வமுள்ள கேள்விமனுதாரர்கள் மேலதிக தகவல்களை பணிப்பாளர், (வீடமைப்பு) நகர அபிவிருத்தி அதிகார சபை, 6வது மாடி "செத்சிறிபாய பிரிவு ஐ", பத்தரமுல்ல முகவரியில் பெற்றுக் கொள்ள முடியும். தொலைபேசி: 0112875907 (மு.ப 9.00 தொடக்கம் பி.ப 3.00 வரையுள்ள காரியாலய நேரங்களில்), மின்னஞ்சல்: dirhousinguda@gmail.com

6. ஆங்கில மொழி மூலமான கேள்விப்பத்திர ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்றினை ரூபா **100,000 (ஒரு இலட்சம்) +VAT** தெகையை நகர அபிவிருத்தி அதிகாரசபைக்கு மீளளிப்புச் செய்யப்படாத கேள்வி மனுக் கட்டணமாகச் செலுத்தி 2021.02.03 ஆம் திகதி முதல் **2022.03.02 ஆம் திகதி வரையான காலத்தினுள் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரையில் பணிப்பாளர், (வீடமைப்பு)** நகர அபிவிருத்தி அதிகார சபை, 6வது மாடி "செத்சிறிபாய பிரிவு I" பத்தரமுல்ல எனும் முகவரிக்கு எழுத்து மூல விண்ணப்பமொன்றினைச் சமர்ப்பித்து ஆர்வமுள்ள கேள்விமனுதாரரால் கொள்வனவு செய்யப்பட முடியும். கொடுப்பனவுகள் காசு மூலமானதாக **தலைவர், நகர அபிவிருத்தி அதிகார சபை சார்பில் செலுத்தப்படுதல் வேண்டும்.**

7. கேள்வி மனுக்கள் அனைத்தும் நகல் பிரதியுடன் பின்வரும் முகவரிக்கு 2022.03.03 ஆம் திகதி பி.ப.2.00 மணி அன்றோ அல்லது அதற்கு முன்னரோ சமர்ப்பிக்கப்பட வேண்டும். காலம் தாழ்த்தி பெற்றுக்கொள்ளப்படும் கேள்விமனுக்கள் நிராகரிக்கப்படும். கேள்வி மனுக்கள் அனைத்தும் முடிவுறும் திகதியில் கேள்வி மனுதாரர்கள் அல்லது அவர்களது அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதிகள் பிரசன்னமாயிருக்குத் தருணத்தில் திறக்கப்படும்.

**தலைவர்,**
**நகர அபிவிருத்தி அதிகார சபை**
**அமைச்சரவையால் நியமிக்கப்பட்ட நிலையான பெறுகைக் குழு SCAPC)**
**நகர அபிவிருத்தி, கழிவுப் பொருள் வெளியேற்றம் மற்றும் துப்பரவு ஏற்பாட்டு**
**நடவடிக்கைகள் இராஜாங்க அமைச்சு**
**17வது மாடி**
**"சுகுறுபாய"**
**பத்தரமுல்ல**

8. இவ் கேள்வி மனுக்கள் முடிவறும் திகதியில் இருந்து 120 நாட்கள் செல்லுபடியாகும்

9. அனைத்து கேள்விப் பத்திரங்களினும் பிணை முறிகள் 28 **நாட்களுக்கு மேற்பட்ட செல்லுபடியாகும் காலத்தைக் கொண்டிருக்கும்** வகையிலமைந்த இலங்கை மத்திய வங்கியினால் அனுமதியளிக்கப்பட்ட வர்த்தக வங்கியொன்றிலிருந்து பெற்றுக் கொள்ளப்பட்ட நிபந்தனைகளற்ற கேள்விமனுப் பிணையான ரூபா 12.00 மில்லியன் கொண்ட "பிணை முறியொன்றினை" இணைத்ததாக இருத்தல் வேண்டும்.

10. மு.ப. 11.00 மணிக்கு இடம்பெறும் கள பார்வையிடலின் பின்னர், "முன்னரான-கேள்விமனுக் கூட்டமொன்று" 2022.02.17ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு 9 ஆம் மாடியில் அமைந்துள்ள நகர அபிவிருத்தி அதிகார சபை கேட்போர் கூடத்தில் இடம்பெறும்.

**தலைவர்,**
**நகர அபிவிருத்தி அதிகார சபை**
**9வது மாடி**
**"செத்சிறிபாய"**
**பத்தரமுல்ல**

கிழக்கு மாகாணத்தில் கொரோனா

# தொற்றுப்பரவல் அதிகரிப்பு



## தடுப்பூசியை விரைந்து செலுத்துமாறு வலியுத்தல்

ஹஸ்பர், எம்.எஸ்.எம். ஹனீபா

கிழக்கு மாகாணத்தில் கொரோனா வைரஸ் தொற்றுப் பரவல் கடந்த சில நாள்களாக படிப்படியாக அதிகரித்து வருவதால், அனைவரையும் விரைந்து தடுப்பூசி செலுத்துமாறு வலியுறுத்தப்பட்டுள்ளது.

இது தொடர்பாக, கிழக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் டொக்டர் ஏ.ஆர். எம்.தௌபீக், நேற்று (30) வெளியிட்டுள்ள அறிக்கையில்,

'2021 டிசெம்பர் மாதம் 1,622 நோயாளர்களும் 17 மரணங்களும் பதிவு செய்யப்பட்ட நிலையில், 2022 ஜனவரி மாதம் 2,500 புதிய தொற்றாளர்களும் 25 மரணங்களும் பதிவு செய்யப்பட்டுள்ளன. ஒமிக்ரோன் இதற்குக் காரணமாக இருக்கலாம். இக்கிருமியானது நோயாளிக்கு வெகுவாக பாதிப்பை ஏற்படுத்தாது எனக் கூறப்பட்ட போதிலும் மிக விரைவாக ஏனையோருக்குத் தொற்றக் கூடியது.

எனவே, இவ்வகை தொற்றிலிருந்து எம்மைப் பாதுகாத்துக் கொள்ள ஏற்கெனவே நாம் கூறுகின்ற பொதுவான கட்டுப்பாடுகளான சமூக இடை வெளிகளை பேணல், சரியான முறையில் முகக் கவசம் அணிதல், அடிக்கடி கைகளை சவர்க்காரம் இட்டுக் கழுவுதல் அத்தோடு, தேவையற்ற ஒன்றுகூடல்களைத் தவிர்த்தல் என்பன அவசியமாகும்.

மேலும், மூன்றாவது தடுப்பூசியான பைசர் தடுப்பூசியை 20 வயதுக்கு மேற்பட்ட அனைவரும் செலுத்திக் கொள்வதுடன், 12 - 19 வயதுக்கு இடைப்பட்டவர்கள் பைசர் தடுப்பூசியை பெற்றுக் கொள்வதும் சிறந்ததாகும்.

தடுப்பூசியில் ஏற்கெனவே இருந்த ஆர்வம், மக்கள் மத்தியில் குறைவடைந்து, ஆதாரமற்ற பொய் வதந்திகளை மக்கள் மத்தியில் பரப்பியமை, தடுப்பூசியை செலுத்திக் கொள்வதில் சிக்கல் நிலைமை காணப்படுகிறது.

எதிர்வரும் காலங்களில் கொவிட் நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரித்து மரணங்களின் எண்ணிக்கையும் அதிகரிக்கும் போது, தடுப்பூசியைப் பெறாதவர்கள் கைசேதப்பட வேண்டி ஏற்படும்' என்று அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## கஜமுத்துகளுடன் இருவர் கைது

ரீ.எல்.ஜவ்பர்கான்



மட்டக்களப்பு, புல்லுமலையில் 80 இலட்சம் ரூபாய் பெறுமதியான இரண்டு கஜமுத்துகளுடன் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர் என மட்டக்களப்பு மாவட்ட வன ஜீவராசிகள் திணைக்களப் பணிப்பாளர் எஸ்.சுரேஸ்குமார் தெரிவித்தார். மகோயாவிலிருந்து புல்லுமலை விஹாரைக்கு முன்னால் மோட்டார் சைக்கிளில் குறித்த கஜமுத்துகளை கடத்திக்கொண்டு, மட்டக்களப்பு நோக்கி வந்து கொண்டிருந்த வேளை, வவுணதீவு விசேட அதிரடிப் படையினரும் கல்லடி கடற்படை வீரர்களும் மேற்கொண்ட சுற்றிவளைப்பின்போது இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைதானவர்களிடமிருந்து 30.8 கிராம் மற்றும் 4.5 கிராம் எடையுள்ள இரு கஜமுத்துகளும் கடத்தலுக்குப் பயன்படுத்திய மோட்டார் சைக்கிளும் கைப்பற்றப்பட்டுள்ளன.

யாழ். சிறைச்சாலையில்


# 43 பேருக்கு கொரோனா

எஸ். தில்லைநாதன்

யாழ்ப்பாணம் சிறைச்சாலையில் 43 பேருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணத்தில் கொரோனாப் பரவல் மீண்டும் தீவிரமடைந்துள்ளதாக வைத்திய அறிக்கையின் ஊடாக தெரியவந்துள்ளது.

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் நேற்று முன்தினம் (29) மேற்கொள்ளப்பட்ட பி.சி. ஆர் பரிசோதனை அறிக்கையின் அடிப்படையில், யாழ். சிறைச்சாலையில் 43 பேர் உட்பட யாழ். மாவட்டத்தில் 52 பேருக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.



எனவே, மக்களை மிகுந்த அவதானத்துடன் செயற்படுமாறு, சுகாதாரத் தரப்பினர் அறிவுறுத்தியுள்ளனர்.

## நாவற்குழி விபத்தில் பெண் பரிதாப பலி

வி.நிதர்ஷன்

யாழ். நாவற்குழி பகுதியில் நேற்று (30) நண்பகல் நடந்த விபத்தில் பெண் ஒருவர் பரிதாபகரமாக உயிரிழந்துள்ளனர்.

யாழ்ப்பாணத்தில் இருந்து கிளிநொச்சி நோக்கிச் சென்றுகொண்டிருந்த இலங்கை போக்குவரத்து சபைக்குச் சொந்தமான பஸ்ஸில் பயணித்த பெண், ஏ-9 வீதி, நாவற்குழி பகுதியில் வைத்து பஸ்ஸில் இருந்து இறங்கியுள்ளார்.

அங்கு இறங்கிய பெண், வீதியோரமாக இருந்த மண் திட்டில் கால் வைத்த போது, கால் தடுமாறி வீதியில் விழுந்துள்ளார்.

பெண் வீதியில் விழுந்ததை கவனிக்காத குறித்த பஸ் அங்கிருந்து புறப்பட்டது. இதன்போது வீதியில் விழுந்த பெண்ணின் தலை பஸ்ஸின் பின் பக்க சில்லில் நசிவுண்டது.

உடனடியாக அங்கிருந்து மீட்கப்பட்ட பெண், பட்டா ரக வாகனத்தின் உதவியுடன் சாவகச்சேரி வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்ட போதும் அவர் உயிரிழந்ததாக வைதியர்கள் தெரிவித்துள்ளனர்.

சடலம் சாவகச்சேரி வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது.



காணாமல் போன மீனவர்களை

## மூன்றாவது நாளாகவும் தேடும் பணி முன்னெடுப்பு

எஸ். தில்லைநாதன்

யாழ்ப்பாணம், வடமராட்சி கிழக்கு வத்திராயனிலிருந்து கடலுக்கு சென்று இதுவரை கரை திரும்பாத இரண்டு மீனவர்களையும் தேடும் பணி நேற்று (30) மூன்றாவது நாளாகவும் முன்னெடுக்கப்பட்ட போதும் இதுவரை எந்தவிதமான தகவல்களும் கிடைக்கவில்லை.

நேற்றுக் காலை 10 மணியிலிருந்து மீனவர்களைத் தேடும் பணி இடம்பெற்றநிலையில் ஏமாற்றத்துடன் கரை திரும்பினர்.

சம்பவம் தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது, கடந்த வியாழக்கிழமை (27) பிற்பகல் கடற்றொழிலுக்கு சென்ற யோசேப் பிரேம்குமார், அருண்குமார் தணிகைமாறன் என்ற இரண்டு மீனவர்களுமே இவ்வாறு காணாமல் போயிருந்தனர்.

நேற்று முன்தினம் குறித்த மீனவர்களை தேடும் பணியில் ஈடுபட்ட சக மீனவர்கள், காணாமல் போனவர்கள் தொழிலுக்குப் பயன்படுத்திய வலைகள், துண்டங்களாக காணப்பட்ட நிலையில் கரைக்கு எடுத்து வந்துள்ளனர்.

இம் மீனவர்கள் பாரிய இயந்திர படகில் மோதுண்டு மூழ்கடிக்கப்பட்டிருக்கலாமென உறவினர்கள் அச்சமடைந்துள்ளனர்.

படுகொலை செய்யப்பட்ட

## பெண்ணுக்கு கொரோனா

அஸ்லம் எஸ்.மௌலானா

சாய்ந்தமருது பிரதேசத்தில் படுகொலை செய்யப்பட்ட பெண்ணுக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டதையடுத்து, அவரது ஜனாஸா மட்டக்களப்பு, ஓட்டமாவடியில் அமைந்துள்ள மஜ்மா நகர் கொவிட் மையவாடியில் நேற்று (30) நல்லடக்கம் செய்யப்பட்டுள்ளது.

சாய்ந்தமருது-15 ஆம் பிரிவு புதுப்பள்ளி வீதியிலுள்ள ஒழுங்கையில் அமைந்துள்ள வீடொன்றில், தனிமையில் வசித்து வந்த 78 வயதுடைய சுலைமான் செய்யது முஹாரி என்பவர் கடந்த வியாழக்கிழமை (27) அதிகாலை கொலை செய்யப்பட்டு, அவர் வசமிருந்த தங்க ஆபரணங்கள், பணம் என்பன கொள்ளையிடப்பட்டிருந்தன.

அவரது உடலில் இருந்து பெறப்பட்ட பி.சி.ஆர் பரிசோதனை அறிக்கை நேற்று முன்தினம் (29) மாலை கிடைக்கப் பெற்றதாகவும் அதில் அப்பெண்ணுக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டிருப்பதாக தங்களுக்கு தெரிவிக்கப்பட்டதாகவும் அவரது புதல்வர் அலியார் சௌபர் தெரிவித்தார்.

அதேவேளை, கொலையாளி இன்னும் கண்டுபிடிக்கப்படாத நிலையில், இச்சம்பவம் தொடர்பான பொலிஸ் விசாரணைகள், குற்றப்புலனாய்வுப் பிரிவினரிடம் ஒப்படைக்கப்பட்டு, தீவிரமாக முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் சாய்ந்தமருது பொலிஸார் தெரிவித்தனர்.


மூன்று நாள்களாக

## மாணவனை காணவில்லை

எம்.எம்.அஹமட் அனாம், எச்.எம்.எம். பர்ஸான்



ஓட்டமாவடியை சேர்ந்த பாடசாலை மாணவனை கடந்த மூன்று நாள்களாக காணவில்லை என பெற்றோரால் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதாக வாழைச்சேனை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி லசந்த பண்டார தெரிவித்தார்.



ஓட்டமாவடி - 01, பழைய மக்கள் வங்கி வீதியில் வசிக்கும் மன்சூர் அன்ஸப் (வயது - 17) என்ற மாணவனே வெள்ளிக்கிழமை (28) மாலை 03 மணியளவில் வீட்டை விட்டு வெளியேறி காணாமற்போயுள்ளார்.

அவரது சைக்கிள், மேற்சட்டை, பாதணி என்பன பாசிக்குடா யானைக்கல் பிரதேசத்தில் நேற்று முன்தினம் (29) கண்டுடெடுக்கப்பட்டுள்ளன.

இதனால் காணாமல் போன மாணவன் கடலில் மூழ்கியிருக்கலாம் என்ற சந்தேகத்தில் சுழியோடிகள் தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர்.

அதேவேளை, மாணவனின் அலைபேசியைத் தொடர்புகொள்ளும் போது, அது பாவனையில் உள்ளதாகவும் ஆனால், மறுமுனையில் இருந்து எந்தப் பதிலும் இல்லை என்றும் மாணவனின் தந்தை தெரிவித்தார்.

இம்மாணவன் தொடர்பான தகவல்கள் ஏதும் கிடைத்தால் அருகில் உள்ள பொலிஸ் நிலையத்துக்கோ அல்லது அவரது தந்தையின் தொலைபேசி 0773587875 இலக்கத்துக்கோ தொடர்பு கொள்ளுமாறும் கேட்கப்பட்டுள்ளது.

காணாமல்போன மாணவன், ஓட்டமாவடி தேசிய பாடசாலையில் விஞ்ஞான பிரிவில் முதலாம் வருடத்தில் கல்வி கற்று வருபவர் என்பதுடன், 2020ஆம் ஆண்டுக்கான கல்வி பொதுத் தராதர சாதார தரப் பரீட்சையில் 09 பாடங்களிலும் ஏ சித்தி பெற்றவர் என்பது குறிப்பிடத்தக்கது.



பருத்தித்துறை

## பொலிஸாரால் சிரமதானம்

எஸ்.தில்லைநாதன்

பருத்தித்துறை பொலிஸாரால் நேற்று (30) சிரமதானப் பணிகள் முன்னெடுக்கப்பட்டன. அத்துடன், மரக் கன்றுகளும் நாட்டி வைக்கப்பட்டன.

பருத்தித்துறை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி பிரதான பொலிஸ் பரிசோதகர் பிரியந்த அமரசிங்க தலைமையில் இடம்பெற்ற இந்தச் சிரமதான நிகழ்வில், உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் சுஜீவ இத்தமால் கொட பிரதம அதிதியாகக் கலந்துகொண்டார்.

பருத்தித்துறை பொலிஸ் நிலைய பொலிஸார் இதில் கலந்துகொண்டனர்.





தமிழர் விடுதலை

## கூட்டணியின் புதிய நிர்வாகம்

தமிழர் விடுதலைக் கூட்டணியின் விசேட பொதுச் சபைக் கூட்டம், யாழ்ப்பாணம் இலங்கை இளைஞன் மண்டபத்தில் நேற்று முன்தினம் (29) நடைபெற்றது. இக்கூட்டத்தின் பிரகாரம், கட்சியின் புதிய தலைவராக தம்பையா இராசலிங்கம் தேர்வு செய்யப்பட்டார். செயலாளர் நாயகமாக கணபதிப்பிள்ளை யோகராஜாவும் நிர்வாக செயலாளராக கதிரவேலு கௌரிகாந்தனும் நியமிக்கப்பட்டுள்ளனர். அத்துடன், சிரேஷ்ட உப தலைவராக சண்முகராஜா அரவிந்தன் ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டார். மகளிரணி செயலாளர், இளைஞரணி செயலாளர் தெரிவுகளும் நடைபெற்றன. மேலும், கட்சியினுடைய பதவி நிலைகள், தேர்தலின் அடிப்படையில் வடக்கு, கிழக்கில் உள்ள அனைவருக்கும் பதவிகள் பகிர்ந்தளிக்கப்பட்டன.

'தமிழ் மக்களின் அபிலாஷைகளைத் தீர்ப்பதற்கு இளைஞர்கள் எமது கட்சியில் இணைந்துள்ளார்கள். அவர்கள் மக்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான முயற்சிகளை மேற்கொள்ளவுள்ளனர்" என புதிய நிர்வாகத்தினர் தெரிவித்தனர்.

இதேவேளை, கடந்த 25ஆம் திகதி நாங்கள் கட்சி அலுவலகத்துக்குச் சென்றபோது, அலுவலகம் பூட்டப்பட்டிருந்தது. அது தொடர்பில் யாழ்ப்பாணம் பொலிஸில் முறைப்பாடுகளை வழங்கியுள்ளதாகவும் அவர்கள் தெரிவித்தனர்.

## ஒமிக்ரோன் பேராபத்தை ஏற்படுத்தலாம்

அஸ்லம் எஸ்.மௌலானா

ஒமிக்ரோன் பிறழ்வாக திரிபடைந்துள்ள கொரோனா வைரஸ் நாட்டில் மீண்டும் தலைவிரித்தாடத் தொடங்கியுள்ள சூழ்நிலையில், மக்கள் தடுப்பூசியைப் பெற்றுக் கொள்ளாமல் அசமந்தப்போக்குடன் செயற்படுவதானது பாரதூரமான விளைவுகளை ஏற்படுத்தலாம் என்று, கல்முனைப் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டொக்டர் ஐ.எல்.எம்.றிபாஸ் தெரிவித்தார்.

ஏனைய மாகாணங்களுடன் ஒப்பிடுகையில், கிழக்கு மாகாணத்தில் கொரோனா தொற்று வீதமும் மரண வீதமும் சடுதியாக அதிகரித்துள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

கல்முனைப் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்;

"தற்போது மூன்றாவது தடுப்பூசியைப் பெறுகின்ற விடயத்தில் மக்கள் ஆர்வம் காட்டாமல், பின்னடிக்கின்ற நிலைமையைப் பார்க்க முடிகிறது.

"இது, ஒமிக்ரோன் பரவலின் பாரதூரத்தைப் புரிந்துகொள்ளாத தன்மையைக் காட்டுகின்றது. குறிப்பாக எமது பிராந்தியத்தில் தடுப்பூசியை பெற்றுக்கொள்வதில் பெரும் அலட்சியம் காட்டப்படுகிறது.



"கடந்த வெள்ளிக்கிழமை (28), நாட்டில் 934 பேருக்கு கொரோனா தொற்றியுள்ள நிலையில், அவர்களுள் 300 பேர் கிழக்கு மாகாணத்தவர்களாவர். அவ்வாறே 27 மரணங்களில் 04 பேர் கிழக்கு மாகாணத்தவர். இதிலிருந்து தற்போது எமது பிராந்தியத்திலும் கொரோனா பரவல் மிகத் தீவிரமாகப் பரவி வருகின்றது என்பதை மக்கள் உணர்ந்து கொள்ள வேண்டும்.

"கொரோனா ஒழிந்து விட்டது என்று எவரும் நினைக்க வேண்டாம். முதலாம், இரண்டாம் அலைகளின்போது இருந்த அச்சம் இப்போது முற்றாக நீங்கி, எல்லாவற்றையும் மறந்து செயற்படுகிறோம். அடிப்படை சுகாதார நடைமுறைகளைக் கூட கடைப்பிடிக்க தவறி நிற்கின்றோம். இது பேராபத்தையே கொண்டு வந்து சேர்க்கும் என்பதை உணர்ந்து கொள்ள வேண்டும்" என்றார்.

மகாத்மா

## காந்தியின் சிரார்த்த தினம்

என்.ராஜ்

மகாத்மா காந்தியின் 74ஆவது சிரார்த்த தினம், யாழ். போதனா வைத்திய சாலை முன்றலிலுள்ள மகாத்மா காந்தியின் உருவச்சிலை அமைந்துள்ள இடத்தில் நேற்று (30) காலை நடைபெற்றது.

அகில இலங்கை காந்தி சேவா சங்கம், இந்திய துணை உயர்ஸ்தானிகரகம் ஆகியன இந்நிகழ்வை ஏற்பாடு செய்திருந்தன.

மகாத்மா காந்தியின் உருவச்சிலைக்கு மலர்மாலை அணிவிக்கப்பட்டு, மலரஞ்சலி செலுத்தப்பட்டு, அகில இலங்கை காந்தி சேவா சங்கத்தின் அதிகாரபூர்வ வெளியீடான 'காந்தீயம்' பத்திரிகையும் இதன்போது வெளியிட்டு வைக்கப்பட்டது.



'காந்தியம்' பத்திரிகை வடக்கு மாகாண முன்னாள் முதலமைச்சரும் பாராளுமன்ற உறுப்பினருமான சீ.வி விக்னேஸ்வரனால் வெளியிடப்பட்டது.

நிகழ்வில் பாராளுமன்ற உறுப்பினர்களான சித்தார்த்தன், முன்னாள் மாகாண சபை உறுப்பினர்களான சிவாஜிலிங்கம், கஜதீபன் ஆகியோரும் கலந்துகொண்டனர்.

# இளைஞர்களே நாளைய சமூகத்தின் உந்து சக்திகள்

### வடிவேல் சுரேஷ் எம்.பி தெரிவிப்பு



நாளைய சமூகத்தின் உந்து சக்திகள் இளைஞர்களே எனத் தெரிவித்துள்ள பாராளுமன்ற உறுப்பினரும் இலங்கை தேசிய தோட்டத் தொழிலாளர் சங்கத்தின் பொதுச் செயலாளருமான வடிவேல் சுரேஷ், அவர்களுக்கு சரியான, முறையான பாதை அமைத்துக் கொடுப்பது நம் ஒவ்வொருவரினதும் கடமையாகும் என்றார்.

2021 ஆம் ஆண்டிற்கான பன்முகப்படுத்தப்பட்ட நிதி ஒதுக்கீட்டின் கீழ், மலையக விளையாட்டுக் கழகங்களுக்கு விளையாட்டு உபகரணங்கள் பகிர்ந்தளித்த சந்தர்ப்பத்திலேயே அவர் மேற்கண்டவாறு கருத்து தெரிவித்திருந்தார்.

தொடர்ந்து தெரிவித்த அவர், ஒரு நாட்டினதும் ஒரு சமூகத்தினதும் வெற்றி, இளைஞர்களின் கைகளிலே தங்கியுள்ளது. அவ்வகையில் மலையக இளைஞர்கள் இன்று கல்வியில் சாதித்து, அனைத்துத் துறைகளிலும் தடம் பதித்திருக்கிறார்கள். விளையாட்டுத்துறையும் அவர்களுக்கு புதிதல்ல. தடைக் கற்களையும் படிக்கற்களாக மாற்றி, வேதனையிலும் சாதனை படைத்துக் கொண்டிருக்கிறார்கள். அவர்களின் திறமைகளை வெளிக்கொணர்வது மலையக மக்கள் பிரதிநிதிகளான எங்களுடைய கடமையாகும்.

அத்துடன், மலையகப் பிரதேசங்களில் சட்டவிரோதமான போதைப்பொருட்கள் பாவனை அதிகரித்து வருகின்ற நிலையில், நம் இளைஞர்களை நல்வழிப்படுத்தி, அவர்களைத் திறன்மிக்கவர்களாக ஊக்குவிப்பது நம் பொறுப்பாகும். அதுவே எதிர்கால மலையக சமூகத்திற்கு அடித்தளமாக அமையும் என்றார்.

## நீட்வுட் பாடசாலைக்கு புதிய கட்டடம்



ஹல்துமுல்ல, நீட்வுட் பாடசாலையில், வகுப்பறை பற்றாக்குறை காணப்பட்டதால், அதனை நிவர்த்தி செய்யும் வகையில், புதிய கட்டடத்தை இ.தொ.காவின் உப தலைவர் செந்தில் தொண்டமான் நிர்மாணித்து, திறந்து வைத்தார்.

நீட்வுட் பாடசாலை அதிபர், ஆசிரியர்கள், பெற்றோர்களின் கோரிக்கையை ஏற்று, செந்தில் தொண்டமானின் விசேட நிதி ஒதுக்கீட்டின்கீழ், இவ்வேலைத் திட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

### தடுப்பூசி அட்டை இல்லாமல்

## சபைக்கு வர அனுமதி இல்லை



■ துவாரகஷன்

நோர்வூட் பிரதேச சபைக்கு தமது அலுவல்களை நிறைவேற்றிக் கொள்ள வரும் போது, கட்டாயம் கொவிட் -19 தடுப்பூசி போட்டுக் கொண்டமைக்கான அட்டைகளைத் தம்மோடு கொண்டு வர வேண்டும் என நோர்வூட் பிரதேச சபைத் தவிசாளர் ரவி குழந்தைவேல் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பான அறிவிப்புப் பலகையும் பிரதேச சபை வளாகத்தில் காட்சிப்படுத்தப்பட்டு உள்ளது.

இது தொடர்பாக அவர் கருத்து தெரிவிக்கையில்,

பிரதேச சபைத் தவிசாளர் என்ற ரீதியிலும், சுகாதாரக் குழுவுக்கு தலைவர் என்ற அடிப்படையிலும் பொது மக்களின் பாதுகாப்பு கருதி கொரோனா-19 பரவலைக் கட்டுப்படுத்தும் வகையில் தீர்க்கமான முடிவை எடுக்க வேண்டிய பொறுப்பு, எனக்கு உள்ளதால் தடுப்பூசி அட்டை கட்டாயமாக்கப்பட்டுள்ளது,


எனவே, அரசாங்கம் அறிவித்துள்ளது போல, ஒவ்வொருவரும் தமது சுயபாதுகாப்பை உறுதிப்படுத்திக் கொண்டு சமூக பாதுகாப்புக்கும் உதவ வேண்டும் என்பதை வலியுறுத்தும் வகையில், தடுப்பூசி பெற்றுக் கொண்டமைக்கான அத்தாட்சியாக தடுப்பூசி அட்டைகளை காண்பிக்க வேண்டும்.

பிரதேச சபையின் ஊடாக, சுகாதார நடைமுறைகளைப் பேணுவதற்கான அறிவுறுத்தல்கள் உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்பட்டு, கடந்த செவ்வாய்க்கிழமை (18) முதல் அமல்படுத்தவும் தீர்மானிக்கப்பட்டு பொது மக்களுக்கு அறிவுறுத்தப்பட்டஉள்ளது. பிரதேச சபையில் அலுவல்களை நிறைவேற்றிக் கொள்ள வருகை தருவோர் ஊடாக, தடுப்பூசிகளை பெற்றுக் கொள்வதற்கு ஊக்குவிக்க வேண்டும் என்பதே எமது நோக்கமாகும் என்றார்.

### தாயிடமிருந்து பிரிந்த சிறுத்தைக் குட்டி

## பத்திரமாக கையளிக்கப்பட்டது

■ ரஞ்சித் ராஜபக்ஷ



தாயிடமிருந்து பிரிந்து தனித்திருந்த சிறுத்தைக் குட்டியொன்று, ஹட்டன், ருவன்புர பிரதேசவாசிகளால் பிடிக்கப்பட்டு, நல்லதண்ணி வனஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகளிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

குறித்த பிரதேசத்திற்கு அருகிலிருக்கும் இடமொன்றில் சில குட்டிகளுடன் சிறுத்தையொன்று இருந்ததைக் கண்டு பிரதேசவாசிகள் கலவரமடைந்ததால், தாய் சிறுத்தையும் குட்டிகளும் சிதறி ஓடியுள்ளன.

இதன்போது குட்டியொன்று தாயிடமிருந்து பிரிந்து, தனியாக இருந்த சிறுத்தை குட்டியை பிரதேசவாசிகள் பிடித்து, வனஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகளிடம் கையளித்துள்ளனர்.

### அக்கரப்பத்தனையில்

## பஸ்தரிப்பிடத்தை உடைத்த நால்வர் கைது

■ நீலமேகம் பிரசாந்த்



அக்கரப்பத்தனை பிரதேச சபைக்கு உட்பட்ட, மன்றாசி நகரத்தில் அமைக்கப்பட்டு வரும் பஸ் தரிப்பிடத்தை உடைத்த நால்வர், அக்கரப்பத்தனை பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

மக்களின் கோரிக்கைக்கு அமைய, இராஜாங்க அமைச்சர் ஜீவன் தொண்டமானின் நிதியொதுக்கீட்டில், அமைக்கப்பட்டு வந்த பஸ் தரிப்பிடமே 27ஆம் திகதி உடைக்கப்பட்டுள்ளது.

இதனையடுத்து, அக்கரப்பத்தனை பகுதியைச் சேர்ந்த நான்கு சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளதுடன், அவர்களை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அக்கரப்பத்தனை பொலிஸார் தெரிவித்தனர்.







## தைப்பொங்கல் விழா

கும்புக்கன, சண்முகம் தமிழ் வித்தியாலயத்தில் நேற்று முன்தினம் (29) தைப்பொங்கல் விழா இடம்பெற்றது. இந்நிகழ்வில் விவசாய இராஜாங்க அமைச்சர் சசீந்திர ராஜபக்ஷ உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர். (படங்கள்: சுமணசிறி குணதிலக)







## சிறப்பாக கொழுந்து பறித்தவர்கள்

தலவாக்கலை பெருந்தோட்ட கம்பெனிக்கு உட்பட்ட கிளாரெண்டன் தோட்ட நிர்வாகத்தின் ஏற்பாட்டில் 2022ஆம் ஆண்டு சிறந்த கொழுந்து பறிக்கும் போட்டி, நேற்று முன்தினம் (29 ) திகதி 7ம் இலக்கம் கொண்ட தேயிலை மலையில் சிறப்பாக ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இதற்கமைய, எம். விஜயலட்சுமி முதலாம் இடத்தையும் இருதயசாமி ரட்ணமேரி இரண்டாம் இடத்தையும் சுப்பிரமணியம் கோமதி மூன்றாம் இடத்தையும் பெற்றுக் கொண்டனர். (படங்கள்: துவாரகஷான்)





## குடிநீர் திட்டம்

நோர்வூட்– சமர்வில் வட்டாரம், நோட்டன் டிவிசன் ஸ்ரீ முத்துமாரியம்மன் கோவிலுக்கான குடிநீர் திட்டம் ஆரம்பித்து வைக்கப்பட்டது. தொழிலாளர் தேசிய சங்கத்தின் தலைவரும் நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான பழனி திகாம்பரத்தின் பன்முகப்படுத்தப்பட்ட நிதி ஒதுக்கீட்டின் கீழ், மேற்படி கோவிலுக்கான குடிநீர் திட்டம் நேற்று முன்தினம் (29) ஆரம்பித்து வைக்கப்பட்டது. (படங்கள்: எம். கிருஸ்ணா)

# 'நாய் வேடமிட்டால் குரைத்துத்தான் ஆக வேண்டும்' என்பது நிரூபிக்கப்பட்டது

"போராட்டங்களை நடத்துவதன் மூலம், காணாமல் ஆக்கப்பட்டோரின் பிரச்சினைக்குத் தீர்வைப் பெற்றுவிட முடியாது. காணாமல் ஆக்கப்பட்டோரின் பிரச்சினைக்குத் தீர்வு வேண்டும் என்றால், அரசுடன் பேசினால்த்தான் பெற்றுக்கொடுக்க முடியும்" என நீதி அமைச்சர் அலி சப்ரி, யாழ்ப்பாணத்தில் தெரிவித்திருக்கிறார்.

நீதி அமைச்சால் ஏற்பாடு செய்யப்பட்ட, 'நீதிக்கான அணுகல்' எனும் நடமாடும் சேவை யாழ்ப்பாணத்தில் சனிக்கிழமை (29) ஆரம்பித்துவைக்கப்பட்டது. இதன்போது, காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள், நீதிக்கான அணுகல் நடமாடும் சேவையில், வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் விவகாரத்தைக் கையாளக்கூடாது என்று தெரிவித்து போராட்டத்தில் ஈடுபட்டபோதே, நீதி அமைச்சர் மேற்கண்டவாறு கூறியிருந்தார்.

காணாமல் ஆக்கப்பட்டவர்கள் தொடர்பான பரணகம ஆணைக்குழுவில் 32 ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்கள் பதிவுசெய்திருக்கிறார்கள். வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் தொடர்ச்சியான போராட்டம், வவுனியா மாவட்டத்தில் 1,808ஆவது நாளாக இடம்பெற்றுக் கொண்டிருக்கின்றது. இவ்வாறு போராடிக்கொண்டே, 114 பேர் இறந்துவிட்டார்கள்.

வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் போராட்டத்தின் நோக்கம் என்பது, மரணச்சான்றிதழையோ, இழப்பீட்டையோ பெற்றுக்கொள்வதில்லை. தமது உறவுகளுக்கு உண்மையில் என்ன நடந்தது என்பதுடன், இதுதொடர்பில் சர்வதேச விசாரணை நடத்தப்பட்டு, பொறுப்புக்கூறல் நிலைநாட்டப்பட வேண்டும் என்பதாகும்.

இறுதி யுத்தத்தின் நிறைவின் போது, இராணுவத்திடம் ஒப்படைக்கப்பட்டவர்கள், வெள்ளைவானில் கடத்திச் செல்லப்பட்டவர்கள், வீதியில், வீடுகளில் வைத்துக் கைது செய்யப்பட்டவர்கள் என இலங்கை பாதுகாப்பு படைகளால் கையாளப்பட்டவர்கள், இதுவரை எங்கே இருக்கிறார்கள் என்று தெரியாத நிலையிலேயே, அவர்களுடைய உறவுகளால் போராட்டம் முன்னெடுக்கப்படுகின்றது.

இவ்வாறு, பாதுகாப்புப் படைகளிடம் இருந்தவர்களுக்கு என்ன நடந்தது என்பதை கூற வேண்டும் என்பதுவே, போராட்டக்காரர்களின் முக்கிய கோரிக்கையாகும். அத்துடன், குற்றவாளி என்று சந்தேகப்படும் தரப்பிடமே நீதி விசாரணை நடத்துவது என்பதிலும் எந்த நியாயமும் கிடையாது. இதனாலேயே தமக்கான நீதி கோரி சர்வதேச விசாரணையை அவர்கள் கோரி நிற்கிறார்கள்.

எனவே, நீதி அமைச்சர் அலி சப்ரி, காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் பிரச்சினைக்கு எந்தவகையான தீர்வை முன்வைப்பார், அவரது அதிகார எல்லைக்குள்ளும், இலங்கை அரசாங்கத்தின் பேரினவாத அடக்குமுறைக் கொள்கைக்குள்ளும் கட்டுப்பட்டு, அவரால் எத்தகைய தீர்வை முன்வைக்க முடியும் என்பது காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளுக்கு நன்கு தெரியும்.

காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் போராட்டத்தை, அவர்களது போராட்ட மனோதிடத்தை உடைப்பதற்கு அரசாங்கம் பல அம்புகளை அவ்வப்போது ஏவிக்கொண்டே இருக்கின்றது. அந்த அம்புகளில் ஒன்றே, "இப்போது போராட்டங்களை நடத்துவதன் மூலம், காணாமல் ஆக்கப்பட்டோரின் பிரச்சினைக்குத் தீர்வைப் பெற்றுவிட முடியாது" என்று கூறிச் சென்றிருக்கின்றது. 'நாய் வேடம் போட்டால் குரைத்துத் தான் ஆக வேண்டும்' என்பதை நீதி அமைச்சர் அலி சப்ரியும் நிரூபித்திருக்கின்றார்.




## தமிழ்Mirror க்கு எழுதுங்கள்

www.tamilmirror.lk

தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருதுகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk







## வாழ்வியல் தரிசனம்

எனது கண்களின் பார்வையும் உன் நீள் விழி நோக்கும் இணைந்தே, இதயங்களின் கலவை நிகழ்ந்தன. இது ஆன்ம பிணைப்பு.

இயற்கையின் பார்வையில் நிகழ்வுகள் பலரகம். இதற்குள் நாங்களே முதல் ரகம். நாங்கள் பேசுவதும் இயங்குவதும் மொழியில்லாத புதிய பிணைப்பு. காதுகளில் புகுந்து கொள்ளாது, விழிகளுக்கும் புலப்படாத அருவம் போல் கலந்த இன்பசாகரம். எத்தனை கனவுகளுக்குள் புகுந்தோம் நாம்! எழுத முடியாத பல்லாயிரம் சுவடிகள். கல்லில் பொறித்து, சிலையில் வடிக்கும் கற்பனைகளுக்கும் அப்பாலானவை. காவியங்களிலும் மேலானவை.

அருவமான தேகமா இது? அழிக்க முடியாத பாக்கியம் பெற்றவர்கள். ஏகாந்தப் பெருவானம் எமது உலகு. எல்லைகள் அற்றது; அன்பான காதலால் உருவான வையகம். எங்கோ பிறந்தோம் எங்கோ சந்தித்தோம். எப்படிப் பிணைந்தோம்; காற்றோடும் கலந்தோம்.

ஓ... வாழ்வின் தேடலில் கண்ட அனுபவம் பல்கோடி. இன்று நாங்கள் இருவரும் உலகில் இல்லை. பொல்லாத யுத்தம் எம்மை அழித்தது. காப்பவனே எதிரியானான். எனினும் வாழ்கின்றோம், பெருவெளியில் இன்பத்துடன்!

–பருத்தியூர் பால. வயிரவநாதன்

# தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியும் மாகாண சபைத் தேர்தலும்



என்.கே. அஷோக்பரன்
Twitter: @nkashokbharan

அரசியலமைப்புக்கான 13ஆவது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்த வேண்டி, தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் முன்னாள், இன்னாள் தலைவர்கள் சிலர் கையொப்பமிட்டு, பாரதப் பிரமருக்கு கடிதமொன்றை அனுப்பியிருந்தமை அனைவரும் அறிந்ததே!

இந்த முயற்சி, 13ஆம் திருத்தத்தை தமிழ் மக்களின் அரசியல் அபிலாஷைகளை அடைந்துகொள்வதற்கான தீர்வாக உருவகப்படுத்தப்படுவதைக் கண்டித்து, தமது எதிர்ப்பை வலுவாகத் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி முன்வைத்து வருகிறது.

அண்மையில், கூட்டமொன்றில் உரையாற்றிய தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம், "தமிழர்களுடைய தீர்வு விடயத்தில், தமிழர்களுக்கு என்ன தேவை என்பதைத் தமிழர்கள்தான் கூறமுடியும். அதனை எவரும் கூற முடியாது; திணிக்கவும் முடியாது. 13 ஆவது திருத்தத்தைத் தீர்வாக ஒருபோதும் ஏற்க முடியாது. நாம் அதில் தெளிவாகவுள்ளோம். 13ஆம் திருத்தத்தை, தமிழ் மக்களை ஏற்று கொள்ளவைப்பது, தமிழர்களுடைய அபிலாஷைகளுக்கு முற்றுப்புள்ளி வைப்பது, தமிழர் தேசத்தை அழிப்பதற்கான ஒரு நடவடிக்கையாகத்தான் நாம் பார்க்கின்றோம். இதற்கு, நாம் ஒருபோதும் ஒத்துழைக்கப்போவதில்லை. நாங்கள் இதை எதிர்ப்பதை இந்தியா, தமக்கு எதிரானதாகப் பார்க்கிறது என்றால், அது இந்தியாவின் முடிவு. ஆனால், எங்கள் மக்களுடைய நலன்களை, எவருடனும் பேரம்பேசி, நாங்கள் கைவிடத் தயாரில்லை. தமிழ் மக்களின் இனப்பிரச்சினை தீர்வுக்காக, நேர்மையாகச் செயற்படுகின்ற எந்த நாட்டுடனும், நாங்கள் பயணிக்க மாட்டோம் எனக் கூறவில்லை. மாறாக, அனைவரையும் கேட்டுக்கொள்வது, தமிழர்களுடைய அடிப்படை அபிலாஷைகள் குறிப்பாக, திம்பு கோட்பாடுகளில் கூறப்பட்ட அடிப்படை அபிலாஷைகள் முழுமையாகப் பூர்த்தி செய்யக் கூடிய வகையிலே, அவர்களுடைய ஆதரவை எமக்குத் தரவேண்டும் என்ற அடிப்படையில்தான் நாம் கோரிவருகின்றோம்" என்று கூறியிருந்தார்.

இது, தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தொடர்ச்சியானதும், நிலையானதுமாக நிலைப்பாடாக இருந்து வருவதை அவதானிக்கக் கூடியதாக இருக்கிறது.

இதேயிடத்தில், "அப்படியானால், மாகாண சபைத் தேர்தலில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி போட்டியிடுமா" என்ற கேள்வி எழுப்பப்பட்ட போது, அதற்குப் பதிலளித்த கஜேந்திரகுமார், "நாம் மாகாண சபை தேர்தலில் போட்டியிடுவது 13ஐ கோரும் தரப்புகளுக்குப் பிரச்சினையாக இருக்கும். நாம் மாகாண சபையைக் கைப்பற்றி, அந்த வெற்றுக்கோசத்தை அம்பலப்படுத்தி விடுவோம் என்று அவர்கள் அஞ்சுகிறார்கள். அதனால், கட்டாயம் நாம் தேர்தலில் போட்டியிட முடிவு செய்துள்ளோம். நாம், 13ஆம் திருத்தத்தை நிராகரிக்கிறோம். எமக்கு மாகாண சபை தேர்தலில் போட்டியிட விரும்பவில்லை. கடந்த தேர்தலை எமது கட்சி பகிஸ்கரித்தது. ஆனால், மக்களைப் பகிஷ்கரிக்கக் கோரவில்லை. மாகாண சபை முறைமையின் அதிகாரமற்ற தன்மையை அம்பலப்படுத்தாமல், அதை ஏற்றுக்கொள்ளும் நிலைக்கு கூட்டமைப்பு சென்றுள்ளதால், மாகாண சபை முறையை அம்பலப்படுத்தும் பொறுப்பை, நாமே ஏற்க வேண்டும்" என்றும் தெரிவித்திருந்தார்.

கஜேந்திரகுமாரின் மாகாண சபைத் தேர்தல் பற்றி இந்த மனமாற்றம், 13ஆவது திருத்தத்தை எதிர்க்கும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி, மாகாண சபைத் தேர்தலில் போட்டியிடுவதா என்ற கேள்விகளுக்கும் கேலிகளுக்கும் விமர்சனங்களுக்கும் வழிவகுத்துள்ளது.

இந்த விமர்சனங்களை முன்வைக்கும் தரப்புகளை எடுத்துக்கொண்டால், பிரதான தரப்பு, தமிழ்த் தேசிய கூட்டமைப்பு அல்லது, தமிழரசுக் கட்சி ஆதரவாளர்கள். அரசியல் போட்டி இதற்கான பிரதான காரணமாகும்.

2020 பொதுத் தேர்தலில், யாழ்ப்பாண தேர்தல் மாவட்டத்தில், தமிழ்த் தேசிய கூட்டமைப்பு 112,967 வாக்குகளைப் பெற்றுக்கொண்டிருந்தவேளை, தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி 55,303 வாக்குளைப் பெற்றிருந்தது. 2015ஆம் ஆண்டு பொதுத் தேர்தலில் தமிழ்த் தேசிய கூட்டமைப்பு 207,577 வாக்குகளைப் பெற்றிருந்தமையும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி வெறுமனே 15,022 வாக்குகளை மட்டுமே பெற்றிருந்தமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.

ஆகவே, 2020 பொதுத்தேர்தல் முடிவுகளானது, தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியானது, இனியும் உதிரிக்கட்சியாகக் கருதிவிட முடியாத நிலைக்கு வந்துவிட்டது என்பதை அனைவருக்கும் உணர்த்தியிருந்தது. தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி பெற்றுக்கொண்ட அனைத்தும், தமிழ்த் தேசியத்துக்கான வாக்குகள். ஆகவே, தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி, மாகாண சபைத் தேர்தலில் போட்டியிட்டால், அது தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் வாக்குவங்கியில்தான் கணிசமான பாதிப்பை உண்டாக்கும்.

மறுபுறத்தில், கண்மூடித்தனமான கொள்கைப்பிடிப்புள்ளோரும், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் உணர்வுபூர்வ ஆதரவாளர்கள் சிலரும், 13ஐ எதிர்த்துக்கொண்டு, 13இனால் வந்த மாகாண சபைத் தேர்தலில் போட்டியிடுவது எவ்வாறு ஏற்புடையது என்று கேட்கிறார்கள்.

இவர்களின் எண்ணமானது, ஒரு கட்டமைப்பை எதிர்க்க வேண்டுமென்றால், அந்தக் கட்டமைப்புக்கு வெளியில் நின்றுகொண்டு மட்டும்தான் அதனை எதிர்க்க வேண்டும்; அதுதான் முறையானது என்ற மனநிலையிலிருந்து பிறந்தது. இன்று, இப்படி யோசிப்பவர்களைச் சொல்லியும் பிழையில்லை. ஏனென்றால் இதுவரை காலமும், கஜேந்திரகுமாரும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினரும், இதே நிலைப்பாட்டில்தான் இருந்தார்கள். அதனால்தான் அவர்கள் முதலாவது வடமாகாண சபைத் தேர்தலிலும் போட்டியிடவில்லை.

ஓர் ஆதரவாளர் குழுவை, ஒரு வகையான கொள்கை மனநிலையில் வளர்த்தெடுத்துவிட்டு, திடீரென்று அந்த மனநிலையில் மாற்றத்தை ஏற்படுத்த முடியாது. அதனால்தான் என்னவோ, மாகாண சபைத் தேர்தலில் போட்டியிடும் முடிவைத் தெரிவித்த கஜேந்திரகுமார் கூட, " மாகாண சபை முறைமையின் அதிகாரமற்ற தன்மையை அம்பலப்படுத்தவே நாம் போட்டியிடுகிறோம்" என்று கூறவேண்டியதாக இருக்கிறது.

அரசியலில் இலட்சியவாத (*idealism*) அடிப்படையில், தமிழ்த் தேசிய அரசியலை அணுகும் போது, தாயகம், தேசியம், சுயநிர்ணயம் என்பதே தமிழ் மக்களின் அரசியல் அபிலாஷைகள். இவற்றை எவ்வகையிலேனும் சமரசத்துக்கு உட்படுத்தும் எந்தவொரு நடவடிக்கைக்கும் நேரடியாகவோ, மறைமுகமாகவோ ஆதரவுதர முடியாது என்ற இலட்சியவாத நிலைப்பாட்டில் நிற்கலாம்.

இலட்சியவாதம் என்பது, சிந்தனைக்கும் பேச்சுக்கும் எழுத்துக்கும் பகிர்வுக்கும் சிறந்ததோர் அணுகுமுறை. ஏனெனில், சிந்தனையில், பேச்சில், எழுத்தில், பகிர்வில் அது புலன்களைத் திருப்திப்படுத்தும் ஒரு சிந்தனை உருவாக்கத்தை, கற்பனையில் சிருஷ்டித்து, பேச்சில், எழுத்தில் கட்டமைத்துப் பகிர்கிறது. ஆனால் அந்த இலட்சிய சிருஷ்டிக்கும், யதார்த்தத்துக்கம் இடைவெளியிருக்கிறது. அந்த இடைவெளியில் என்ன செய்வது என்பதுதான் முக்கியமான கேள்வி. ஜேர்மனிய பேரரசின் சான்செலராக இருந்த ஒட்டோ வொன் பிஸ்மாக், "அரசியல் என்பது சாத்தியமானவற்றின், அடையக்கூடியவற்றின் கலை. அடுத்த சிறந்ததைப் பெற்றுக்கொள்ளும் கலை" என்பார். யதார்த்தவாத அரசியல் (*realpolitik*) சிந்தனை இது. யதார்த்தவாத அரசியலை, இலட்சியவாத அரசியலின் எதிரியாக உருவகப்படுத்தும் போக்கு தவறானது. இலட்சியவாத அரசியல் என்பது, எதிர்கால அடைவுகளைப் பற்றியது. யதார்த்தவாத அரசியல் என்பது, தற்கால பயணத்தைப் பற்றியது. கொள்கைற்ற யதார்த்தவாதம் என்பது, சந்தர்ப்பவாதமாகும்.

சந்தர்ப்பவாத அரசியல் என்பதுதான், இலட்சியவாத அரசியலின் எதிரி. யதார்த்தவாதம் என்பது, கொள்கையற்ற நிலை அல்ல. அது கொண்ட கொள்கையையும் இலட்சியத்தையும் மட்டுமல்லாது, களநிலையையும் யதார்த்தத்தையும் புரிந்துகொண்டு செயற்படுதலைக் குறிக்கும்.

"ஆறாம் திருத்தத்தின் கீழ், சத்தியப் பிரமாணம் செய்யமாட்டோம்" என்று தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்கள் பதவியிழந்த பின்னர், தமிழர் பிரதிநிதித்துவம் நின்றுவிட்டதா? இல்லை.

கொள்கை அடிப்படையில் அன்று எடுத்த நடவடிக்கை சரி. அதுபோலவே, கொள்கையை மட்டுமல்லாது, யதார்த்தத்தையும் புரிந்துகொண்டு, ஆறாவது திருத்தத்தின் கீழ் சத்தியப் பிரமாணம் எடுத்துக்கொண்டமைதான் யதார்த்த அரசியல். அது, தமிழ்த் தேசியம் கண்மூடித்தனமான 'தனிநாடு' என்ற பிரசாரத்திலிருந்து விலகி, தமிழர்களின் அரசியல் அபிலாஷைகளை அடைந்துகொள்ள 'தனிநாடு' தான் ஒரே வழி அல்ல என்பதையும் புரிந்துகொண்டு, தமிழ் மக்களின் அரசியல் அபிலாஷைகளை சமரசம் செய்யாத, அதேவேளை, ஓர் அரசுக் கட்டமைப்புக்குள்ளான தீர்வை நோக்கி, தமிழ்த் தேசிய இலட்சியவாத அரசியலை வழிப்படுத்தியது. இலட்சியவாத அரசியலும் யதார்த்தவாத அரசியலும் எதிரிகள் அல்ல. இலட்சியவாதத்தின் அடைவுகளைப் பெற்றுக்கொள்ள, நல்லதொரு பாலமாக யதார்த்தவாத அரசியல் உதவும். அது, அதைக் கட்டமைப்பவர்களின் கைகளில் தங்கியிருக்கிறது.

மாகாண சபைத் தேர்தலில் போட்டியிடாது விடுவது, ஒரு கட்சியாகத் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணிக்கு பெரும் பின்னடைவைத் தரும். மேலும், தமிழ் மக்களுக்குத் தமது அரசியலில், சரியான மாற்றுத்தெரிவுகள் அவசியம்.

அரசியலில் ஏகம், ஏகத்துவம் என்பன ஆரோக்கியமானதல்ல. போட்டி நல்லது என்பதைத்தான் பாமரத் தமிழன்,'கீரைக்கடைக்கும் எதிர்க்கடை வேண்டும்' என்று எளிமையாக எடுத்துச் சொல்லிவிட்டான். தாம், மாகாண சபைத் தேர்தலில் போட்டியிடுவதற்கு கஜேந்திரகுமார் எந்தக் காரணத்தையும் சொல்லட்டும்; ஆனால், அந்த முடிவு வரவேற்கத்தக்கது.

## கடிதங்கள்

### பாரதிபுரம் வித்தியாலயத்தை தரம் உயர்த்துமாறு கோரிக்கை



கிளிநொச்சி கல்வி வலையத்திலுள்ள பாரதிபுரம் வித்தியாலயத்தை தரம் உயர்த்துவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு பிரதேச மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். 1983, 1984 ஆம் ஆண்டு காலப்பகுதிகளில் வன்செயல் காரணமாக இடம்பெயர்ந்து, பாரதிபுரம் பகுதியில் தங்கியிருந்த மக்களின் கல்வித் தேவைக்காக உருவாக்கப்பட்ட பாரதிபுரம் வித்தியாலயம், அதிக மாணவர்களைக் கொண்ட முன்னணிப் பாடசாலையாக விளங்குகின்றது.

பாடசாலையில், கணிதம், விஞ்ஞானம் ஆகிய உயர்தரப் பிரிவுகள் உருவாக்கப்பட்டு, பல்கலைக்கழகத்துக்கும் மாணவர்கள் தெரிவாகியுள்ள நிலையில், இதுவரை குறித்த பாடசாலையைத் தரம் உயர்த்துவதற்கான எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்றும் இந்தப் பாடசாலையைத் தரம் உயர்த்துவதில் அதிகாரிகள் பாரபட்சம் காட்டி வருவதாகவும் சுட்டிக்காட்டப்படுகின்றது.

கடந்த ஆண்டில், குறித்த பாடசாலையைத் தரம் உயர்த்துவதற்கு, பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரனால், கோரிக்கைகள் அடங்கிய கடிதம் கல்வி அமைச்சின் செயலாளரிடம் அனுப்பி இருந்த நிலையில், பாடசாலையை தரமுயர்த்துவதாக உறுதிவழங்கப்பட்டபோதும், இதுவரை தரம் உயர்த்தப்படவில்லை. ஆனால், மாணவர் எண்ணிக்கை குறைந்த, கணிதம், விஞ்ஞானம் ஆகிய பிரிவுகள் இல்லாத பாடசாலைகள் கூட தரம் உயர்த்தப்பட்டுள்ளன. எனவே, கிளி. பாரதி வித்தியாலயத்தை தரமுயர்த்துமாறு பாடசாலை சமூகம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

– யது பாஸ்கரன்

# இலங்கையின் வட பிராந்தியத்தில் கடற்றொழில் பயிற்சித் திட்டம்

Sail Lanka Yachting Group தனது Building a Future Foundation திட்டத்தினூடாக இலங்கையின் வட பிராந்தியத்தில் கடற்றொழில் பயிற்சித் திட்டத்தை முன்னெடுக்க முன்வந்துள்ளது. இதனூடாக வடக்கைச் சேர்ந்த இளைஞர்களுக்கு கடற்றொழில்சார் பயிற்சிகள் வழங்கப்படவுள்ளதுடன், படகு நிர்மாண பணிகளும் மேற்கொள்ளப்படவுள்ளன.

யாழ்ப்பாண மாவட்டத்தின் வேலணைப் பகுதியில் இந்தத் திட்டத்தை வெற்றிகரமாக அறிமுகம் செய்திருந்ததைத் தொடர்ந்து, Sail Lanka Yachting Group இன் தவிசாளர் பிரே பிரிங்கியர்ஸ் கருத்துத் தெரிவிக்கையில், "இலங்கையின் தென் பிராந்தியத்தில் 2004 ஆம் ஆண்டில் ஏற்பட்ட சுனாமி அனர்த்தத்தை தொடர்ந்து, பாதிக்கப்பட்ட சமூகத்தாருக்கு உதவிகளை வழங்கும் வகையில் முன்னெடுத்திருந்த Building a Future Foundation திட்டம் வெற்றிகரமானதாக அமைந்திருந்ததைத் தொடர்ந்து, இவ்வாறான திட்டத்தை வட பிராந்தியத்திலும் முன்னெடுப்பது எமது சிந்தனையாக அமைந்துள்ளது. நாட்டின் தென் பகுதியைச் சேர்ந்த பல இளைஞர்களுக்கு தொழில் வாய்ப்புகளை BAFF ஏற்படுத்தியுள்ளது. இந்தத் திட்டத்தை யாழ்ப்பாணத்திலும் மேற்கொள்ள எதிர்பார்க்கின்றோம். யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த 12 இளைஞர்கள் இலங்கையின் தென் பகுதியில் அமைந்துள்ள BAFF பயிற்சி நிலையத்தில் ஏற்கெனவே 12 மாத கால கோட்பாட்டு மற்றும் பிரயோக பயிற்சிகளை பின்பற்றியுள்ளனர்" என்றார்.

இந்தத் திட்டத்தின் அறிமுக நிகழ்வில் பிரதம அதிதியாக கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா கலந்து கொண்டதுடன், மேலும் பல சிறப்பு அதிதிகளும் பங்கேற்றனர். வட மாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜா இந்த நிகழ்வுக்கு தமது ஆதரவை வழங்கியிருந்தார்.




தவிசாளர் பிரே பிரிங்கியர்ஸ் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்; "கடல்சார் மற்றும் அனுபவசார் சுற்றுலா மையமாக யாழ்ப்பாணம் திகழ்வதற்கு அதிகளவு வாய்ப்புகள் காணப்படுகின்றன என்பதில் நாம் நம்பிக்கை கொண்டுள்ளோம். மிரிஸ்ஸ, கொழும்பு மரீனா போர்ட் சிற்றியை தொடர்ந்து இது எமது மூன்றாவது செயற்பாட்டு மையமாக அமைந்திருக்கும். உள்நாட்டு மற்றும் சர்வதேச சுற்றுலா வளர்ச்சியை கட்டியெழுப்ப எமக்கு ஏதுவாக அமைந்திருக்கும். வேலணையில் 4.5 ஏக்கர் காணியில் 540 சதுர மீற்றர் பகுதியில் புதிய SLYG பயிற்சி நிலையம் மற்றும் படகுத்துறை ஆகியன அமைந்துள்ளன.

யாழ்ப்பாண பயிற்சி நிலையத்தால் எந்திரவியல் பொறியியல், மின்சாரம், வெல்டிங், குளிர்சாதனப் பெட்டி, வாயு குளிரூட்டி போன்றவற்றில் அடிப்படை திறன் பயிற்சிகள் வழங்கப்படும். அதனைத் தொடர்ந்து படகு நிர்மாணம், உள்ளக மற்றும் வெளியக என்ஜின் பழுதுபார்ப்பு, பராமரிப்பு தொடர்பான பிரயோக பயிற்சிகளும் வழங்கப்படும். ஒரு வருட காலப்பகுதிக்கு கற்கைகள் முன்னெடுக்கப்படும் என்பதுடன், கோட்பாட்டு மற்றும் பிரயோக ரீதியான பயிற்சிகளைக் கொண்டிருக்கும்.

அதனூடாக பட்டதாரிகளுக்கு படகு நிர்மாணத் துறையில் பணியாற்றுவதற்கான வாய்ப்புக் கிடைக்கும். உள்நாட்டு மற்றும் சர்வதேச சுற்றுலா நடவடிக்கைகளுக்காக பயன்படுத்தப்படும் Ocean Diamond - 80 அடி மிதக்கும் புட்டிக் ஹோட்டல், Ceycat - 55 அடி மிதக்கும் கட்டுமரம் போன்ற படகுகள் நிர்மாணம் தொடர்பான பிரயோக பயிற்சிகள் வழங்கப்படும்.

போர்ட் சிட்டி, கொழும்பு மரீனா, யாழ்ப்பாணம் இடையே படகுச் சேவையை ஆரம்பித்து யாழ்ப்பாணத்துக்கும் கொழும்புக்கும் இடையிலான தூரத்தை நெருக்கமாக்க நாம் முயற்சிக்கின்றோம். அதனூடாக வடக்கை நீர் அடிப்படையான சுற்றுலா மற்றும் கடல்சார் சுற்றுலா நடவடிக்கைகளுக்கான புதிய மையமாக கொண்டிருக்க முடியும். சிலோன் சிப்பிங் கோர்பரேஷனுடன் இணைந்து படகுகளை நிர்மாணிப்பதற்கு திட்டமிட்டுள்ளோம். இவை ஆரம்பத்தில் உள்நாட்டில் பயன்படுத்தப்படும். அதனைத் தொடர்ந்து, எதிர்காலத்தில் எல்லைகளுக்கிடையே பயணிக்கக்கூடிய படகுகளை நிர்மாணிக்க திட்டமிட்டுள்ளோம்" என்றார்.

# 'லைஃவ்ஸ்டைல் போனஸ் 2022' அறிமுகம்

ஜோன் கீல்ஸ் கம்பனியின் துணை நிறுவனமான யூனியன் அஷ்யூரன்ஸ் பிஎல்சி, லைஃவ்ஸ்டைல் போனஸ் 2022 திட்டத்தை அறிமுகம் செய்துள்ளது. 2022 மார்ச் மாதம் 31ஆம் திகதிக்கு முன்னதாக ஆயுள் காப்புறுதித் திட்டமொன்றை கொள்வனவு செய்யும் வாடிக்கையாளர்களுக்கு, பெறுமதி வாய்ந்த ஸ்மார்ட் சாதனங்களை வெற்றியீட்டுவதற்கான வாய்ப்பு வழங்கப்படும்.

அதிர்ஷ்டசாலி வெற்றியாளர் தெரிவை கொண்டுள்ள இந்த ஊக்குவிப்புத் திட்டம் ஜனவரி 1ஆம் திகதி முதல் அறிமுகம் செய்யப்பட்டுள்ளது. 2022 மார்ச் மாதம் 31ஆம் திகதிக்கு முன்னதாக, ஆகக்குறைந்தது ரூ. 15,000 மாதாந்த தவணைக் கட்டணத்துடன் (காலாண்டுக்கு ரூ. 45,000; அரையாண்டுக்கு ரூ. 75,000.00) காப்புறுதித் திட்டத்தை ஆரம்பிக்கும் வாடிக்கையாளர்களுக்கு இந்தப் பெறுமதி வாய்ந்த பரிசுகளை வெற்றியீட்டும் வாய்ப்பு வழங்கப்படும்.

இந்த ஊக்குவிப்புத் திட்டம் தொடர்பில் யூனியன் அஷ்யூரன்ஸ் பிரதம விநியோக அதிகாரி செனத் ஜயதிலக கருத்துத் தெரிவிக்கையில், "லைஃவ்ஸ்டைல் போனஸ் 2022 ஐ அறிமுகம் செய்வதையிட்டு நாம் மிகவும் மகிழ்ச்சியடைகின்றோம். 2020, 2021 ஆகிய ஆண்டுகளில் அறிமுகம் செய்யப்பட்ட லைஃவ் ஸ்டைல் போனஸ் திட்டங்களைப் போன்று, எமது




புதிய காப்புறுதிதாரர்களுக்கு கவர்ச்சிகரமான பரிசுகளை வெகுமதியாக வழங்க நாம் எதிர்பார்க்கின்றோம். வாழ்க்கைமுறைகள், எதிர்பார்ப்புகள் மற்றும் உறவுகளை நாம் பேணுவதுடன், தயாரிப்பு பிரிவு சுகாதாரம், ஓய்வூதியம், கல்வி, முதலீடு போன்றவற்றைக் கொண்டுள்ளோம். எமது புதிய காப்புறுதிதாரர்களின் வாழ்க்கை முறைகளை வளமூட்டுவதற்கு நாம் எதிர்பார்க்கின்றோம்" என்றார்.

லைஃவ்ஸ்டைல் போனஸ் 2022 இனால் வழங்கப்படும் பரிசுகளில் முதல் பரிசாக iPhone 13 Pro Max 512GB வழங்கப்படவுள்ளதுடன், iPad Air 2021 with Apple Pencil 2nd Gen & Magic Keyboard, Smart TVs, i5 11th Generation laptops, A-series smartphones, நட்சத்திர ஹோட்டல்களில் வவுச்சர்கள் போன்றன வழங்கப்படவுள்ளன.

பிரதம சந்தைப்படுத்தல் அதிகாரி மஹேன் குணரட்ன கருத்துத் தெரிவிக்கையில், "லைஃவ்ஸ்டைல் போனஸ் 2022 அறிமுகத்துடன், எமது வாடிக்கையாளர்களுக்கு வெகுமதிகளை வழங்கி அவர்களுக்கு பெறுமதியை அதிகரித்துள்ளோம். இந்த வெகுமதிகள் காப்புறுதிதாரருக்கு மாத்திரமன்றி, முழுக் குடும்பத்துக்கும் ஏற்புடையதாக அமைந்துள்ளது. யூனியன் அஷ்யூரன்ஸ் வாடிக்கையாளர் சேவையை மேம்படுத்துவது தொடர்பில் கவனம் செலுத்துவதுடன், பிரத்தியேகமான வாடிக்கையாளர் அனுபவங்களை பெற்றுக் கொடுக்கும்" என்றார்.

உள்நாட்டு இறைவரி திணைக்களத்தினால், யூனியன் அஷ்யூரன்ஸ் போட்டி பதிவு WP/GT/5609 ஆக காணப்படுகின்றது. இதனூடாக, அரசாங்கத்தினால் சட்ட ரீதியில் இந்தப் போட்டிக்கான அனுமதி பெறப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

புதுடெல்லி

# இந்தியாவில் 75 % பேருக்கு தடுப்பூசி செலுத்தப்பட்டுள்ளது

நாட்டில் 75 % பேருக்கு முழுமையான தடுப்பூசி செலுத்தப்பட்டுள்ளதாக இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி தெரிவித்துள்ளார். இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில் "உலகில் மக்களை மிரட்டிவந்த கொரோனா வைரஸை விரட்டியடிக்க, நம் கையில் இருக்கும் ஒரே ஆயுதம் தடுப்பூசி மாத்திரமே. எனவே தடுப்பூசியை மக்கள் முழுமையாகச் செலுத்த வேண்டும் .

நாட்டில் தடுப்பூசி செலுத்த தகுதியான 75 சதவீதம் மக்கள் கொரோனா வைரசுக்கு எதிரான முழுமையான தடுப்பூசியை செலுத்தியுள்ளனர். இச்சாதனைக்காக நாட்டு மக்கள் அனைவருக்கும் எனது வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொள்கிறேன்" என்றார்.



கர்நாடகா

## ஒற்றைக் காகத்தால் வீட்டுக்குள் முடங்கிய மக்கள்



கர்நாடக மாநிலத்தில் ஒப்லாபுரா என்ற கிராமத்தில் வசிக்கும் மக்கள் கடந்த ஆறு மாதங்களாக காகமொன்றிற்குப் பயந்து, வீட்டுக்குள் முடங்கியுள்ள சம்பவம் வியப்பை ஏற்படுத்தியுள்ளது.

குறித்த கிராமத்தில் இருக்கும் காகம் ஒன்று, அப்பகுதியிலேயே நடந்து செல்பவர்கள், சிறுவர்கள், மோட்டார் சைக்கிள்களில் செல்பவர்கள் எனப் பலரையும் விரட்டி, விரட்டி கொத்திவிட்டுப் பறந்து செல்வதாகக் கூறப்படுகின்றது.

இதன் காரணமாக அப்பகுதியில் இருக்கும் பெரும்பாலானவர்களுக்கு தலையில், முகம் உள்ளிட்ட இடங்களில் காயம் காணப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டள்ளது.

மேலும், இதுபோல அட்டகாசம் செய்யும் அந்த ஒற்றை காகத்தை பிடிக்க, கிராமமே முயன்ற போதும் அவர்களால் அதனைப் பிடிக்க முடியவில்லை. இதனாலேயே அக்கிராமத்தில் இருக்கும் மக்கள் அக்காகத்திற்கு பயந்து தலையில் துண்டு கட்டி, வெளியே செல்லும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

உத்தர பிரதேசம்

# மாலையால் திருமணத்தை நிறுத்திய மணமகள்

திருமணத்தின்போது மணமகன் செய்த காரியத்தால் மணமகள் திருமணத்தை நிறுத்திய சம்பவம் உத்தர பிரதேச மாநிலத்தில் இடம்பெற்றுள்ளது.

வட இந்தியாவில் மருதாணி வைத்தல், மாலை மாற்றுதல் போன்ற திருமண சடங்குகள் பிரமாண்டமாக நடத்தப்பட்டு வருகின்றன. அந்தவகையில் உத்தர பிரதேச மாநிலத்தின் ஆரையா மாவட்டத்தைச் சேர்ந்த இருவருக்கு திருமணம் நடைபெறவிருந்த நிலையில், மணமகன், மணமகளுக்கு தாலி கட்டுவதற்கு முன் மாலை மாற்றுதல் நிகழ்ச்சி நடத்தப்பட்டது.

இதன்போது மணமகன் மாலையை தூக்கி எறிந்ததாக, மகமகள் கோபித்துக்கொண்டு, திருமணத்தை நிறுத்தியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.



மணமகன், "நான் மாலையை எறியவில்லை" என்று தெரிவித்தாலும் அதை மணமகள் ஏற்கவில்லை. இதனால் இரு வீட்டாருக்கும் இடையில் வாக்குவாதம் ஏற்பட்டவே, அவர்கள் இறுதியாக பொலிஸ் நிலையத்தை நாடியுள்ளனர்.

அங்கு பொலிஸார் பெண் வீட்டாரிடம் சமாதானம் பேச, மணமகள் திருமணத்திற்கு சம்மதம் தெரிவித்ததாகவும் அதன்பின்னர் திருமணம் நடைபெற்றதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

புதுடெல்லி

# மகாத்மா காந்தியின் நினைவு தினம்



தேசபிதா மகாத்மா காந்தியின் 75ஆவது நினைவு தினம் நேற்று (30) இந்தியா முழுவதும் அனுசரிக்கப்பட்டது. அந்தவகையில் புதுடெல்லி, ராஜ்காட்டில் உள்ள மகாத்மா காந்தியின் நினைவிடத்தில் ஜனாதிபதி ராம்நாத் கோவிந்த், பிரதமர் மோடி, சபாநாயகர் ஓம் பிரிலா உள்ளிட்ட தலைவர்கள் மலர் தூவி மரியாதை செலுத்தியுள்ளனர்.

இது குறித்து பிரதமர் மோடி வெளியிட்ட டுவிட்டர் பதிவில் 'காந்தியின் உன்னதமான கொள்கைகளை மேலும் பிரபலப்படுத்துவது நமது கூட்டு முயற்சியாகும். தியாகிகள் தினமான இன்று, நமது தேசத்தை துணிச்சலுடன் பாதுகாத்த அனைத்து மாவீரர்களுக்கும் வீரவணக்கம் செலுத்துகிறோம். அவர்களின் சேவையும் துணிச்சலும் என்றென்றும் நினைவு கூறப்படும்' எனக் குறிப்பிட்டுள்ளார்.

கோயம்புத்தூர்

# பாடசாலை சத்துணவு கூடத்தில் யானையின் எலும்புக்கூடு



கோயம்புத்தூரில் உள்ள பாடசாலை சத்துணவுக் கூடமொன்றில் யானையின் எலும்புக்கூடு இருந்த சம்பவம் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. தமிழ்நாட்டில் நடைபெறவுள்ள நகர்ப்புற உள்ளூராட்சித் தேர்தலுக்கான பணிகள் தீவிரமடைந்துள்ளன. அந்த வகையில், தேர்தல் மையத்தை தேர்வு செய்யும் பணிகளை தேர்தல் ஆணையம் துரிதப்படுத்தியுள்ளது.

அந்தவகையில் கோயம்புத்தூர் மாவட்டம், வால்பாறையில் உள்ள ஆரம்பப் பாடசாலையொன்று உள்ளூராட்சி தேர்தலில் வாக்குச்சாவடி மையமாக ஒதுக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் குறித்த பாடசாலையை தேர்தல் அதிகாரிகள் நேற்று முன் தினம் (29) நேரில் சென்று ஆய்வு மேற்கொண்ட போது, அங்குள்ள சத்துணவுக் கூடத்தில் சிதைந்த நிலையில் யானைக் குட்டியொன்றின் உடல் இருப்பதைப் கண்டு அதிர்ச்சியடைந்தனர்.

இதனையடுத்து சம்பவ இடத்திற்கு விரைந்து சென்ற வனத்துறையினர், குட்டி யானையின் சிதைந்த உடலை கைப்பற்றி பரிசோதனைக்காக அனுப்பி வைத்துள்ளனர்.

இது குறித்து வனத்துறையினர் கூறுகையில், "போதிய மாணவர் சேர்க்கை இல்லாததாலும், ஊரடங்காலும் இப் பாடசாலை நீண்டநாள்களாக பூட்டப்பட்டிருந்தது. இதனால் அங்கிருந்த துளை வழியாக சத்துணவு கூடத்தில் உள்ள அரிசி, தானியங்களை உண்ண குட்டியானை உள்ளே வந்திருக்கலாம். பின்னர் வெளியே செல்ல வழியில்லாமல் சத்துணவு கூடத்திலேயே உயிரிழந்திருக்கலாம். குட்டியானை இறந்து சில மாதங்கள் இருக்கும்" எனத் தெரிவித்துள்ளனர்.

சீனா

# ஒலிம்பிக்கை சீர்குலைக்க அமெரிக்கா திட்டம்?

குளிர்கால ஒலிம்பிக் போட்டியை சீர்குலைக்கும் முயற்சியில் அமெரிக்கா ஈடுபட்டுள்ளதாக சீனா குற்றம் சாட்டியுள்ளது. எதிர்வரும் 4ஆம் திகதி பீஜிங் குளிர்கால ஒலிம்பிக் தொடர் சீனாவில் தொடங்க உள்ளது.

இந்நிலையில், ஒலிம்பிக் போட்டியை சீர்குலைக்கும் திட்டத்தில் அமெரிக்கா முழுவீச்சில் செயற்படுவதாகவும், குறிப்பாக பல்வேறு போட்டியாளர்களுக்கு பணம் வழங்கி, தொடருக்கு எதிரான செயல்களில் ஈடுபட உத்தரவிட்டுள்ளதாகவும், சீனா குற்றம்சாட்டி உள்ளது.




எனினும், சீனாவின் குற்றச்சாட்டிற்கு அமெரிக்கா மறுப்பு தெரிவித்துள்ளது. உய்குர் இன மக்கள் துன்புறுத்தப்படுவதாக பீஜிங் குளிர்கால ஒலிம்பிக் தொடரை இராஜாங்க ரீதியில் அமெரிக்கா, கனடா உள்ளிட்ட சில நாடுகள் புறக்கணித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

அமெரிக்கா

## ஒற்றை வார்த்தையால் சரிந்த பொருளாதாரம்



உலக பணக்காரர்களில் ஒருவரும் டெஸ்லா மற்றும் ஸ்பேஸ் எக்ஸ் நிறுவனங்களின் ஸ்தாபகரும், அதன் தலைமை நிர்வாக அதிகாரியுமான எலான் மஸ்க் கூறிய ஒற்றை வார்த்தையால் அவரது பொருளாதாரம் சரிந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

உலகளவில் மிகவும் பிரபலம் வாய்ந்த நிறுவனமாக அமெரிக்காவைச் சேர்ந்த மின்சாரக் கார் உற்பத்தி நிறுவனமான டெஸ்லா விளங்குகின்றது.

இந்நிறுவனமானது கடந்த 20 வருடங்களில் ஒட்டுமொத்த ஒட்டோமொபைல் துறையில் மிகப்பெரிய புரட்சியை ஏற்படுத்தியிருந்தது.

இந்நிலையில் டெஸ்லாவால் இவ் வருடம் மின்சாரக் கார் வெளியிடப்படாது எனவும் இவ் ஆண்டு முழுவதும் மனிதர்களுக்கு பதிலாக பணியில் ரோபோக்களை ஈடுபடுத்துவதில் கவனம் செலுத்தவுள்ளதாகவும் தெரிவித்திருந்தார்.

இச் செய்தியை வெளியிட்ட அடுத்த நாளே நியூயோர்க் பங்குச்சந்தையில் டெஸ்லாவின் மதிப்பு 12 சதவீதம் குறைந்துள்ளதாகவும், இதன் காரணமாக தற்போது டெஸ்லாவின் மதிப்பு 100 பில்லியன் டொலர்கள் அளவிற்கு சரிந்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அமெரிக்கா

## 75 வருடங்களுக்கு பின்னர் தென்பட்ட போர்க்கப்பல்



சுமார் 75 வருடங்களுக்கு முன்னர் போரின்போது மூழ்கிய அமெரிக்காவின் யுஎஸ்எஸ் என்ற போர்க்கப்பல், தற்போது கண்டறியப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

1944 ஆம் ஆண்டு அமெரிக்கா, ஜப்பானை எதிர்த்து போரிடுவதற்கு, யுஎஸ்எஸ் என்ற போர்க்கப்பலைப் பயன்படுத்தியது. அக்காலகட்டத்தில் இந்தப் போர்க்கப்பல் உலகிலேயே மிகப்பெரிதாகக் கருதப்பட்டது.

எனினும், ஜப்பான் கடற்படையுடன் நடந்த மிகக்கடும் போரில், இந்தப் போர்க்கப்பலை, ஜப்பான் நாட்டின் யாமோடா தாக்கியது. இதில், அமெரிக்க போர்க்கப்பல் சுமார் 186 நபர்களுடன் தண்ணீரில் மூழ்கியது.

இந்நிலையில் சுமார் 75 வருடங்களுக்கு பிறகு, தற்போது அந்தக் கப்பல் எங்கு உள்ளது என்பது தொடர்பில் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. அதன்படி, அந்தக் கப்பலின் சேதமடைந்த பாகங்கள் ஆறு கிலோ மீற்றர் ஆழத்தில் மூழ்கியிருப்பது கண்டறியப்பட்டது.

மேலும், இது குறித்து வெளியான புகைப்படங்களும் இணையத்தில் வைரலாகி வருகின்றன.

அமெரிக்கா

## 'மியா' குறித்து வெளியான செய்தியால் பரபரப்பு

### அதிர்ச்சியில் ரசிகர்கள்




முன்னாள் ஆபாசப் பட நடிகையான "மியா கலிபா இறந்துவிட்டார்" என இணையத்தில் வெளியான போலிச் செய்திகள், அவரது இரசிகர்கள் மத்தியில் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

இந்நிலையில் இது குறித்து கருத்துத் தெரிவித்த மியா கலிபா, "நான் நலமாக இருக்கிறேன். எனது மரணம் குறித்து வெளியான செய்திகள் போலியானவை. யாரும் கவலையடையத் தேவையில்லை" எனத் தெரிவித்துள்ளார்.

இதற்கு முன்னர் கடந்த 2020ஆம் ஆண்டு அவர் தற்கொலை செய்து கொண்டதாக வதந்தி வேகமாக பரவியது. அதன்பின்னர் அவர் இதே போன்று விளக்கம் தெரிவித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

வடகொரியா

## கையோடு கழிவறையை எடுத்துச் செல்லும் கிம் ஜொங் உன்



வட கொரிய ஜனாதிபதி கிம் ஜொங் உன் எந்த வெளிநாட்டுக்குச் சென்றாலும் கையோடு கழிவறையை எடுத்துச் செல்வதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

உலக நாடுகளின் எதிர்ப்பையும் மீறி அணு ஆயுத சோதனை நடவடிக்கைகளில் தீவிரமாக ஈடுபட்டு வரும் வட கொரிய ஜனாதிபதி கிம், எந்த வெளிநாட்டுக்கு சென்றாலும், தனக்கான பிரத்தியேகமாக உருவாக்கப்பட்ட கழிவறையை எடுத்துச் செல்வதாகத் தகவல் வெளியாகியுள்ளது. இதுகுறித்து வடகொரியா கமாண்டோ பிரிவின் முன்னாள் ஊழியர் ஒருவர் பிரபல ஊடகமொன்றிக்கு வழங்கிய செவ்வியில், "பொதுக்கழிவறைகளை பயன்படுத்துவதை சில காலமாகவே நிறுத்திவிட்டார். அவர் தனக்கான பிரத்தியேகமாக உருவாக்கப்பட்ட கழிவறையை மாத்திரமே பயன்படுத்துகிறார். தன்னுடைய மலத்திலிருந்து தனது உடல்நலம் பற்றிய விஷயங்கள் வேறு யாருக்கும் சென்றுவிடக்கூடாது என்பதற்காகவே அவ்வாறு அவர் செய்கிறார். தனது மலம், தவறானவர்களின் கைகளுக்கு சென்றுவிட்டால், அதனால் பிரச்சினைகள் ஏற்படக்கூடும்" என அவர் கருதுவதாக தெரிவித்தார்.

அமெரிக்கா

## காதலியால் மரணத்தின் விளிம்பில் காதலன்



அமெரிக்காவின் ஒக்லஹோமா மாகாணத்தில் வசித்து வந்தவர் டொனால்ட் கிராண்ட். இவர் கடந்த 2001 ஆம் ஆண்டு தனது 25 வயதில் ஹோட்டல் ஒன்றில் புகுந்து, இரண்டு ஊழியர்களை கொலை செய்துவிட்டு அங்கிருந்த பணத்தை கொள்ளையடித்துள்ளார்.

எனினும் பொலிஸாரிடம் பிடிபட்ட அவர் விசாரணையில், சிறையில் இருக்கும் தனது காதலியை பிணையில் எடுக்க பணம் தேவைப்பட்டதால் இக் கொள்ளையில் ஈடுபட்டதாக தெரிவித்தார்.

நீதிமன்ற விசாரணை முடிவில் அவருக்கு நீதிமன்றம் 2005ஆம் ஆண்டு மரண தண்டனை விதித்தது. எனினும், மரண தண்டனை விதிக்கப்பட்டதில் இருந்து அவர் தனது தண்டனையை இரத்துச் செய்ய, பல முறையீடுகளை தாக்கல் செய்தார். பல்வேறு முறை தண்டனையில் இருந்து தப்ப மறுசீராய்வு மனு செய்திருந்த நிலையில், அவை அனைத்தும் தள்ளுபடி செய்யப்பட்டன.

தற்போது, 46 வயதாகும் டொனால்ட் கிராண்ட்க்கு, விஷ ஊசி செலுத்தி மரண தண்டனை நிறைவேற்றப்பட்டுள்ளது. ஒக்லஹோமா மாகாணத்தில் இந்த ஆண்டில் முதல் முறையாக இவருக்கு மரண தண்டனை நிறைவேற்றப்பட்டுள்ளது.



நான்காவது இருபதுக்கு – 20 சர்வதேசப் போட்டியில்

# மேற்கிந்திய தீவுகளை வீழ்த்திய இங்கிலாந்து

நான்காவது இருபதுக்கு - 20 சர்வதேசப் போட்டியில் மேற்கிந்தியத் தீவுகளை இங்கிலாந்து வீழ்த்தியுள்ளது.

ஐந்து போட்டிகள் கொண்ட இத்தொடரில், பார்படோஸில் நேற்று அதிகாலை நடைபெற்ற இப்போட்டியின் நாணயச் சுழற்சியில் வென்ற மேற்கிந்தியத் தீவுகளின் அணித்தலைவர் கெரான் பொலார்ட், தமதணி முதலில் களத்தடுப்பிலீடுபடும் என அறிவித்தார்.

அந்தவகையில், முதலில் துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து, பதிலணித்தலைவர் மொயின் அலியின் 63 (28), ஜேஸன் றோயின் 52 (42), ஜேம்ஸ் வின்ஸின் 34 (26), சாம் பில்லிங்ஸின் ஆட்டமிழக்காத 13 (04) ஓட்டங்களோடு 20 ஓவர்களில் 6 விக்கெட்டுகளை இழந்து 193 ஓட்டங்களைப் பெற்றது. பந்துவீச்சில், கெரான் பொலார்ட் 4-0-23-1, அகீல் ஹொஸைன் 3-0-23-1 என்ற பெறுதிகளைக் கொண்டிருந்தனர்.

> **இங்கிலாந்து, 20 ஓவர்களில் 6 விக்கெட்டுகளை இழந்து 193 ஓட்டங்களைப் பெற்றது. பதிலுக்கு, 194 ஓட்டங்களை வெற்றியிலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய மேற்கிந்தியத் தீவுகள், 20 ஓவர்களில் 5 விக்கெட்டுகளை இழந்து 159 ஓட்டங்களையே பெற்று 34 ஓட்டங்களால் தோல்வியடைந்தது**

பதிலுக்கு, 194 ஓட்டங்களை வெற்றியிலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய மேற்கிந்தியத் தீவுகள், 20 ஓவர்களில் 5 விக்கெட்டுகளை இழந்து 159 ஓட்டங்களையே பெற்று 34 ஓட்டங்களால் தோல்வியடைந்தது. துடுப்பாட்டத்தில், கைல் மேயர்ஸ் 40 (23), ஜேஸன் ஹோல்டர் 36 (24) ஓட்டங்களைப் பெற்றனர். பந்துவீச்சில், றீஸ் டொப்லி 4-0-21-1, மொயின் அலி 4-0-28-2, அடில் ரஷீட் 4-0-28-1, கிறிஸ் ஜோர்டான் 4-0-30-0 என்ற பெறுதிகளைக் கொண்டிருந்தனர்.

இப்போட்டியின் நாயகனாக மொயின் அலி தெரிவானார்.




## பார்சிலோனா செல்லும் உபமெயாங்க்?

இங்கிலாந்து பிறீமியர் லீக் கழகமான ஆர்சனலின் முன்களவீரரான பியர்-எம்ரிக் உபமெயாங்கை கடனடிப்பையில் கைச்சாத்திடுவதற்கு ஸ்பானிய லா லிகா கழகமான பார்சிலோனா இணங்கியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. எவ்வாறெனினும், இந்நகர்வைப் பூர்த்தி செய்வதற்கு தமது முன்களவீரரான உஸ்மான் டெம்பிலியை பார்சிலோனா முதலில் விற்க வேண்டும் என்பது குறிப்பிடத்தக்கது.

## பிறீமியர் லீக் செல்லும் மொராட்டா?




தற்போது கடனடிப்படையில் இத்தாலிய சீரி ஏ கழகமான ஜுவென்டஸில் காணப்படும் முன்களவீரரான அல்வரோ மொராட்டாவை ஸ்பானிய லா லிகா கழகமான பார்சிலோனாவில் இணைய இன்னொரு லா லிகா கழகமான அத்லெட்டிகோ மட்றிட் அனுமதிக்காது எனத் தெரிகிறது.

அந்தவகையில், இங்கிலாந்து பிறீமியர் லீக் கழகங்களான ஆர்சனல், நியூகாசில் யுனைட்டெட், டொட்டென்ஹாம் ஹொட்ஸ்பர் என்பன 29 வயதான மொராட்டாவைக் கைச்சாத்திடுவதில் ஆர்வமாயுள்ளதாகக் கூறப்படுகிறது.

அவுஸ்திரேலிய பகிரங்க டென்னிஸ் தொடர்:

## சம்பியனான பார்டி

அவுஸ்திரேலிய பகிரங்க டென்னிஸ் தொடரில், உலகின் முதல்நிலை வீராங்கனையான அஷ்லெய் பார்டி சம்பியனாகியுள்ளார்.

நேற்று முன்தினம் நடைபெற்ற இறுதிப் போட்டியில் ஐக்கிய அமெரிக்காவின் டானியல் கொலின்ஸை எதிர்கொண்ட அவுஸ்திரேலியாவின் பார்டி 6-3, 7-6 (7-2) என்ற நேர் செட்களில் வென்றே சம்பியனாகியிருந்தார்.

தனது அரையிறுதிப் போட்டியில் ஐக்கிய அமெரிக்காவின் மடிஸன் கீஸை 6-1, 6-3 என்ற நேர் செட்களில் பார்டி வென்றும், கொலின்ஸின் அரையிறுதிப் போட்டியில் 6-4, 6-1 என்ற நேர் செட்களில் உலகின் ஒன்பதாம் நிலை வீராங்கனையான போலந்தின் இகா ஸ்வியாடெக்கை வென்றுமே இறுதிப் போட்டிக்கு இருவரும் தகுதி பெற்றிருந்தனர்.



விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் திங்கட்கிழமை, 31 ஜனவரி 2022, இல. 08, ஹுணுபிட்டி குறுக்கு வீதி, கொழும்பு-02 இல் வடிவமைக்கப்பட்டு இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.